# சுவடி ஆற்றுப்படை

(மூன்றாம் பாகம்)

DONATED
BY
M.J.M. NAZEEL

அல்ஹாஜ் எஸ்.எச்.எம். ஜெமீல் எம்.ஏ.

இஸ்லாமிய நூல் வெளியீட்டுப் பணியகம்
வெளியீடு: 15

008303E

# SUVADI ARRUPPADAI

## (BIBLIOGRAPHY OF BOOKS BY SRI LANKAN MUSLIMS)

### VOLUME III

| | | |
|---|---|---|
| **Author** | : | Alhaj **S.H.M.Jameel** B.A. (Econ.Sp.): Dip. Ed; M.A., Additional Secretary, Ministry of Cultural & Religious Affairs, Colombo, Sri Lanka. |
| **Publishers** | : | Islamic Book Publishing Centre, Sainthamaruthu, Kalmunai. |
| **Typesetting** | : | Sumathi Lasers Chennai - 600 006 Phone: 8523424 |
| **Cover Design** | : | Huna Hussain |
| **Printers** | : | Threeyem Exports, 83, Angappa Naick Street, Chennai - 600 001. |
| **Available in India at** | : | Basharath Publishers, 83, Angappa Naick Street, Chennai - 600 001. |
| First Edition | : | 1997 Januray 1. |
| Price | : | Rs.150/- |

இலங்கையின் முதலாவது 'அல்லாமா' பட்டமளித்துக்
கௌரவிக்கப்பட்ட பேராசிரியர்
அல்ஹாஜ் கலாசூரி கலாநிதி **மஹ்மூத் முகம்மது உவைஸ்**
அவர்கள்
இந்நூலின் முதலாம் பாகத்துக்கு வழங்கிய

# சிறப்புரை

ஆற்றுப்படுத்தல் என்பது வழிச்செலுத்தலாம். வழிப்படுத்தல் என்றும் பொருள்படும். ஆற்றுப்படை என்பது அதிலிருந்து பெறப்பட்டதாகும். ஆற்றுப்படை ஓர் இலக்கிய வடிவம். பிரபந்தம் என்றும் வழங்கப்படும். தமிழில் தோன்றிய இலக்கிய வடிவங்களுள் தொன்மை வாய்ந்தது ஆற்றுப்படையாகும். தமிழ் இலக்கிய வகைகளுள் மிக்க சிறப்புடையதாகக் கருதப்படுவது ஆற்றுப்படை. ஏனைய இலக்கிய வகைகளுக்கு இல்லாத சிறப்பு ஆற்றுப்படை இலக்கியத்துக்குண்டு. தமிழ் இலக்கியங்களுள் சங்கச் சான்றோரால் போற்றி வளர்க்கப்பட்ட ஓர் இலக்கிய வகை ஆற்றுப்படை எனலாம்.

புரவலன் ஒருவனிடம் பரிசில் பெற்றுவரும் ஓர் இரவலன் பரிசில் பெற விரும்பும் அதே சமயம் வறுமையில் வாடும் ஒருவனைத் தனக்குப் பரிசில் வழங்கிய அந்தப் புரவலனிடம் வழிப்படுத்துவதையே - ஆற்றுப்படுத்துவதையே ஆற்றுப்படை இலக்கிய வடிவம் கொண்டிருக்கும். ஒவ்வோர் ஆற்றுப்படையும் அவ்வாற்றுப்படையில் ஆற்றுப்படுத்தப்படுபவர் பெயரினால் அழைக்கப்படுகிறது. பாணர், கூத்தர், பொருநர், புலவர் என்போர் ஆற்றுப்படுத்தப்பட்டால் அப்பெயர்களால் அந்த ஆற்றுப்படை அழைக்கப்படும். திருமுருகாற்றுப்படை முருகக் கடவுளிடத்து ஆற்றுப்படுத்தப்படுவது. ஆற்றுப்படுத்தப்படும் இடத்தாலும் ஆற்றுப்படை நூல்கள் அழைக்கப்படுகின்றன. வித்துவான் வா.குலாம் காதிறு நாவலரால் இயற்றப்பெற்ற ஆற்றுப்படை, மதுரைத் தமிழ்ச் சங்கத்துப் புலவராற்றுப்படை என வழங்கப்படுவதைக் காணலாம். திருமக்கா நகருக்கு ஆற்றுப்

படுத்தப்படும் ஆற்றுப்படை திருமக்கா ஆற்றுப்படை என வழங்குகிறது.

சுவடி ஆற்றுப்படை தனித்தன்மை வாய்ந்தது. சுவடிக் காப்பகம் அல்லது ஆவணக் காப்பகம் என்பது இலங்கையரால் எழுதப்பெற்ற நூல்கள் கையேட்டுப் பிரதிகள், அச்சியற்றப்பட்ட பிரதிகள் முதலியவற்றை எதிர்காலத்தில் பயன்படுத்தக்கூடிய வகையில் பாதுகாப்பாக வைக்கப்படும் ஒரு வகையான நூல் நிலையமே. அத்தகைய அரசின் ஆவணக் காப்பகத்துக்குச் சென்று ஆய்வினை மேற்கொண்டு பல அரிய தமிழ், அரபுத் தமிழ் நூல்களைக் கண்டெடுத்த ஓர் ஆய்வாளர் அத்தகைய ஆர்வமுடைய மற்றொருவரை அங்கு சென்று அவ்வாய்வினை மேற்கொள்ளுமாறு தூண்டும் வகையிலே இந்த நூல் அமைந்துள்ளது. செய்யுள் வடிவாக இந்நூல் அமையவில்லை. எனினும் பயனுடைய அரிய விவரங்கள் பலவற்றைத் தன்னிடத்தே கொண்டு விளங்குகிறது இந்தச் சுவடி ஆற்றுப்படை.

பயனுள்ள அருமையான சுவடிகளைப் பற்றி அறிய விரும்புவோருக்கு ஒரு வழிகாட்டியாக இந்நூல் அமையும் என்பதனாலேயே ஆய்வாளர் அல்ஹாஜ் எஸ்.எச்.எம். ஜெமீல் அவர்கள் இந்நூலுக்கு சுவடி ஆற்றுப்படை எனப் பெயரிட்டிருக்கலாம். பண்டைய இஸ்லாமிய இலக்கியங்களைப் பற்றி அறிய விரும்பும் ஆர்வலர்க்கும், ஆய்வாளர்க்கும் இந்நூல் ஒரு கை நூலாக அமைய வேண்டும் என்னும் விழுமிய நோக்கத்துடனேயே இந்நூல் - சுவடி ஆற்றுப்படை - தயாரிக்கப்பட்டுள்ளது. ஆசிரியரின் இந்த அரிய முயற்சி பல வழிகளிலும் பயன்தரவல்லது என்பது திண்ணம். அல்ஹாஜ் ஜெமீல் அவர்களின் இவ்வரும்பணி வளர்ந்தோங்க எல்லாம் வல்ல அல்லாஹ்வைப் பிரார்த்திக்கிறேன். வளர்க அவர் தொண்டு. வாழ்க தமிழ்மொழி.

ம.முகம்மது உவைஸ்

'மர்களி', ஹேனமுல்லை,
பாணந்துறை.
18.6.1994.

கொழும்பு பொது நூலகப் பிரதி நூலகராகவும், தேசிய நூலக சேவைகள் சபையின் உதவிப் பணிப்பாளராகவும், இலங்கை நூலகர் சங்கத்தின் தலைவராகவும், சிரேஷ்ட விரிவுரையாளராகவும் கடமையாற்றி நூலகத் துறையில் அதிஉயர் அனுபவம் பெற்றவரும்; இலங்கை இஸ்லாமிய நிலைய கௌரவப் பணிப்பாளராகக் கடமையாற்றித் தற்போது தேசிய நூலக சேவைகள் சபையின் பணிப்பாளர்களுள் ஒருவராகக் கடமையாற்றுபவருமான

**அல்ஹாஜ் எஸ்.எம்.கமால்தீன்** அவர்களின்

# மதிப்புரை

இந்நாட்டின் முன்னணிக் கல்விமான்களுள் ஒருவரும், சிறந்த நிர்வாகியும், எனது அரிய இலக்கிய நண்பர்களுள் ஒருவருமாகிய ஜனாப் எஸ்.எச்.எம்.ஜெமீல் அவர்கள் கல்வித் துறையில் பரந்துபட்ட நீண்டகால அனுபவமிக்கவராவார். அவரது கல்விச் சேவைக் காலம் பாடசாலை முதல் பல்கலைக்கழகம் வரையிலான தொடர்புடையதாக அமைந்திருந்தது. தற்போதும் கூட கலாசார, சமய அலுவல்கள் அமைச்சின் மேலதிகச் செயலாளர் என்ற வகையில் கல்வித் துறையிலும்; இஸ்லாமிய அறிவேடுகளின் வளர்ச்சியிலும் மிகுந்த ஈடுபாடுள்ளவர்.

கலாசார, சமய அலுவல்கள் அமைச்சின் மேலதிகச் செயலாளர் என்ற வகையில் அவ்வமைச்சின் கடமைப் பளுவினிடையிலும், ஜனாப். ஜெமீல் இஸ்லாமிய இலக்கியத் துறையில் ஆற்றிவரும் பணி தனிச்சிறப்புடையதாகும்.

சமய, கலாசார அமைச்சினதும், திணைக்களத்தினதும் வெளியீடுகளாகப் பிரதேச முஸ்லிம்களின் வரலாற்றுப் பின்னணியையும் அவர்தம் சமய, கலாசார, கல்வி முதலாய பல்வேறு துறைகளிலான விபரங்களையும் அநுபவமும் அறிவாற்றலுமிக்கோரைக் கொண்டு எழுதுவித்துத் தொகுத்து வெளியிடும் பாரிய பணியையும் அவ்வக்கால அமைச்சர்க

ளின் வழிகாட்டலில் அவர் மேற்கொண்டு வருகிறார். இது வரை களுத்துறை, அநுராதபுரம், மாத்தளை, மாத்தறை, கண்டி ஆகிய பிரதேசங்களைப் பற்றிய நூல்கள் வெளியிடப் பட்டுள்ளன. இதுபோன்ற பயன்மிக்க ஆக்கங்களை இதுவ ரையில் இந்நாட்டில் முஸ்லிம்களிடையே எவரும் தோற்று விக்கவில்லை. இவ்வகையில் அவரது சாதனை போற்றப்பட வேண்டியதொன்றாகும்.

மேலும் ஜனாப். ஜெமீல் அவர்கள் தாமாகவே எழுதி யுள்ள கணிசமான அளவிலான படைப்புக்களையும் கிழக்கு மாகாணத்தில் இருந்தபோது நிறுவிய கல்முனை ஸாஹிரா பழைய மாணவர் சங்க வெளியீட்டுப் பிரிவு, இஸ்லாமிய நூல் வெள்ளியீட்டுப் பணியகம் என்பனவற்றின் மூலம் ஆற் றிய அரிய சேவையையும் அதன் மூலம் முஸ்லிம் எழுத்தா ளர்களுக்கு வழங்கிய ஊக்கத்தையும் உதவியையும் இங்கு நான் குறிப்பிட விரும்புகிறேன்.

நூற் பட்டியல்களின் முக்கியத்துவத்தைப் பற்றி இங்கு நான் விரிவாகக் கூற வேண்டியதில்லை. அறிவுத் தேட்டத்தில் ஈடுபட்டுள்ள அனைவரும் இவற்றின் இன்றிமையாத் தன்-மையை நன்குணர்வர். பாடசாலையில் கல்வி பயிலும் மாண வர் முதல் பல்கலைக் கழக மட்டத்தில் பயில்வோரும், ஆராய்ச்சித் துறையில் ஈடுபட்டுள்ளோரும், பொதுவாசகரும் கூட இப்பட்டியல்களின் மூலம் தாம் நாடிச் செல்லும் அறிவுத் துறைக்கு ஆற்றுப்படுத்தப்படுவர். நூலகங்களில் இயங்கும் உசாத்துணைப் பிரிவுகள் இந்நூற் பட்டியல்களின் மூலமே பாவனையாளர்களுக்குச் சிறந்த சேவையைப் புரிய முடிகி றது.

இவ்வகையில் எமது நூலகங்களில் தமிழ் வாசகர்களுக்கு உசாத்துணை நூல்களினதும், நூற் பட்டியல்களினதும் ஏனைய அறிவேடுகளின் பற்றாக்குறையினைப் பற்றி அனு பவமிக்க நூலக நிபுணர் அ.திருமலை முத்துசுவாமி பின்வரு மாறு கூறியுள்ளார்.

"ஆய்வு உதவிப் பணியின் இன்றியமையாதமையை, சிறப்பினை நாம் முழுதும் உணராமலிருப்பது மிகவும் வருந் துதற்குரியதாகும். ஒரு சில மேலை நாடுகள் உலகம் வியந்து போற்றும் வண்ணம் பல துறைகளில் உயர்ந்து விளங்குவ தற்குரிய காரணம் அந்நாட்டு மக்கள் நூலகங்கள் ஆற்றுகின்ற ஆய்வு உதவுப் பணியின் அருமை பெருமைகளை உணர்ந்து அதனை நல்ல முறையில் பயன்படுத்துவதேயா கும். அறிஞர்களும், அரசியல் தலைவர்களும் அறிவியல் விற்பன்னர்களும், ஆய்வாளர்களும் அப்பணியினைத் தாங் கள் பெறாத பேறாகக் கருதி அதனை நன்கு பயன்படுத்தி, பல ஆய்வுகளை நடத்தி புதிய உண்மைகளைக் கண்டு பிடித்து அவற்றை நாட்டின் வளர்ச்சிக்கு நன்கு பயன்படுத்து கின்றனர்."

இலங்கை முஸ்லிம்களின் ஆக்கங்களைப் பற்றிய தக வல்களைப் பெறுவது மிகவும் சிரமமானதொரு காரியமாகும். அதுவும் காலத்தால் முற்பட்ட நூல்களைப் பற்றிய தகவல் பெறுவது அரிதான காரியமாகும். இந்நிலையில் நாட்டில் வெளியாகும் நூல்களைப் பற்றிய முழுமையான தகவல்க ளைத் தேடிக் கொள்வதற்கான ஒரே மார்க்கம் இலங்கைத் தேசிய நூலகத்தினால் வெளியிடப்படும் இலங்கைத் தேசிய நூற் பட்டியலாகும்.

இலங்கையில் வெளியாகும் நூல்களைப் பதிவு செய்யும் "அச்சிடுவோர், வெளியீட்டாளர் கட்டளைச் சட்டம்" 1885-ஆம் ஆண்டில் இயற்றப்பட்டது. இச்சட்டம் 1976-ஆம் ஆண்டில் திருத்தப்பட்டது. இதன்படிக்கு இலங் கையில் நூல்களை அச்சிடுவோர் தாம் வெளியிடும் ஒவ் வொரு நூலினதும் ஐந்து பிரதிகளைப் பதிவுக்காகத் தேசிய ஆவணக் காப்பகத்திற்கு அனுப்பி வைத்தல் வேண்டும். இந்நூல்கள் தேசிய அரும்பொருட்சாலை, பேராதனைப் பல் கலைக் கழகம், தேசிய நூலகம் ஆகியவற்றிற்கு வைப்பிற்காக வழங்கப்படும்.

இலங்கையில் நூல் வெளியீடு நீண்டகால வரலாற்றைக் கொண்டிருந்த போதிலும் 1963-ஆம் ஆண்டிற்குப் பிற்பட்ட நூல்களே தேசிய நூற் பட்டியலில் பதிவாகியுள்ளன. இதற்கு முற்பட்ட நூல்களுக்கான பட்டியலைத் தயாரிப்பதற்குத் தேசிய நூலகம் தற்போது திட்டமிட்டுள்ளது. இதற்காகத் தேசிய ஆவணக் காப்பகம், பேராதனைப் பல்கலைக் கழகம் ஆகியவற்றின் உதவியைப் பெற்று இந்நூற் பட்டியலைத் தயாரிக்கவுள்ளது.

நூலகவியற்றுறையில் ஈடுபட்டுள்ள எனக்கு இலங்கையில் வெளிவந்துள்ள இஸ்லாமிய இலக்கிய நூல்களையும், முஸ்லிம்களால் எழுதப்பட்ட ஏனைய நூல்களையும் பட்டியல் படுத்த வேண்டுமென்ற எண்ணம் நீண்ட காலமாக இருந்து வந்துள்ளது. இந்த வகையில் ஓர் ஆரம்ப முயற்சியாக இலங்கையில் 1979-ஆம் ஆண்டில் நடைபெற்ற நான்காவது இஸ்லாமிய இலக்கிய ஆராய்ச்சி மகாநாட்டின் போது ஒரு சில தேர்ந்த நூல்களைக் கொண்ட சிறிய நூற் பட்டியலொன்றை பேருவளை, ஜாமியா நளீமியாவின் சார்பில் வெளியிட்டேன். மேலும் என்னிடம் நூலகவியற்றுறையிலான பாடநெறியைப் பயிலும் சில முஸ்லிம் மாணவர்களை ஊக்குவிக்கும் முகமாகப் பேராசிரியர் அல்லாமா எம்.எம்.உவைஸ், கலாநிதி எம்.ஏ.எம்.சுக்ரி, எஸ்.எச்.எம்.ஜெமீல், எம்.எம்.எம்.மஹ்ரூப், சி.எம்.ஏ.அமீன், ஏ.எம்.சமீம் போன்றவர்களுடைய நூல்கள், கட்டுரைகள் ஆகியவற்றுக்கான பட்டியலாக்கத்தைப் பயிற்சி நெறியில் ஓர் அம்சமாகக் கொள்ள வைத்துள்ளேன்.

இவ்வாறு பட்டியலாக்கம் செய்து ஏ.சாஹிபு லெவ்வை எனும் மாணவர், எஸ்.எச்.எம்.ஜெமீல் அவர்களுடைய நூல்கள், ஆய்வுகள், கட்டுரைகள், உரைகள், கலந்துரையாடல்கள், பதிப்புரைகள், வெளியீட்டுரைகள் என்பனவற்றைப் பட்டியல்படுத்திய 'எண்ணமும் எழுத்தும்' எனும் நூலைக் கல்ஹின்னைத் தமிழ்மன்றம் வெளியிட்டுள்ளது.

இதேவேளையில், இஸ்லாமிய இலக்கிய ஆக்கங்களுக்கான முழுமையானதொரு பட்டியலைத் தயாரிக்கும் பாரிய பணியை மேற்கொள்ள யார் முன்வருவாரென நான் ஆவலோடு எதிர்ப்பார்த்திருந்தேன். இவ்வகையில் தற்போது ஜனாப். ஜெமீல் அவர்களின் ஆர்வமிக்க ஈடுபாட்டினைக் கண்டு பெரும் மகிழ்ச்சியடைகிறேன்.

நெடுங்காலமாகத் தொலைவில் கிழக்கேயுள்ள சாய்ந்தமருதுவில் எவ்வித ஆரவாரமுமின்றி அமைதியாக ஜனாப். ஜெமீல் ஆற்றிவந்துள்ள அரியதொரு பணியின் பரப்பை அவரது முன்னுரையின் வாயிலாகவே தற்போது அறிந்து மிகுந்த வியப்படைந்தேன்.

இப்பணியைப் பற்றி அவர் பின்வருமாறு கூறுகிறார்:

"மிக நீண்டகாலமாக என்னிடம் ஒரு பழக்கம் இருந்து வருகிறது. ஏதாவதொரு நூல் என் கைவசம் கிடைத்தவுடன் அதனை வாசிப்பதற்கு முன்பாகவே அதற்குரிய விவரண அட்டையை (CATALOGUE CARD) தயாரித்தலே அதுவாகும். காலக்கிரமத்தில் இவை நூற்றுக்கணக்கில் சேர்ந்துவிட்டன."

ஜனாப். ஜெமீல் அவர்கள் செய்து வருவது போன்று தாம் படிக்கும் நூல்களுக்கான விவரண அட்டைகளைச் சேகரித்து வரும் ஒரு முஸ்லிமை இந்நாட்டில் நானறிந்த வரையில் இதுவரை கண்டதில்லை! இந்த மகத்தான பணிக்காக நான் அவரைப் பெரிதும் பாராட்டுகிறேன். இம்முயற்சியில் அவரோடு ஒத்துழைத்த அனைவரும் எமது பாராட்டுக்குரியவராவர்.

எனவே நூல்களை வெளியிடும் போது எமது முஸ்லிம் எழுத்தாளர்கள் தமது நூல்களின் பிரதிகளைத் தேசிய ஆவணக் காப்பகத்தில் வைப்பிற்காகக் கொடுத்துதவுவது சட்டப்படி அத்தியாவசியமாகும். அவ்வாறு கொடுக்கப்படும் நூல்களுள் ஒன்று தேசிய நூலகத்திற்கு வைப்பிற்காக அனுப்பப்ப

டும். இந்நூல்களினடியாகவே தேசிய நூற் பட்டியல் தயாரிக்கப் படுகிறது. இந்நூற் பட்டியலில் நூல்களின் முழு விபரங்களும் பதிவாகின்றன. எமது எழுத்தாளர்களின் படைப்புக்கள் நிரந்தரப் பாதுகாப்பைப் பெறச் செய்வதற்கு இதுவே சிறந்த வழியாகும். மேலும் தேசிய நூற் பட்டியல் மூலம் எழுத்தாளர்கள் தமது படைப்புக்களைத் தேசிய ரீதியிலும், சர்வதேச ரீதியிலும் அறிவுலகின் கவனத்திற்குக் கொண்டு வர முடியும்.

அத்தோடு முஸ்லிம் எழுத்தாளர்கள் தமது படைப்புக்களுக்கு இலங்கைத் தேசிய நூலகம் இலவசமாக வழங்கும் ஐ.எஸ்.பி.என் (ISBN) இலக்கத்தைப் பெற்று அதனைத் தமது நூலில் பொறித்துக் கொள்வது பயன்மிக்கதாகும். இதன்படி நூல்களுக்கான சர்வதேச நியம இலக்கம் ஒவ்வொரு நூலுக்கும் தனித்துவமானதோர் இலக்கமாயிருக்கும். அச்சிடப்படும் ஒவ்வொரு நூலினையும் சர்வதேச ரீதியில் இனங்காண உதவுவதே இவ்விலக்கத்தின் நோக்கமாகும். வெளியீட்டாளர்கள், விநியோகஸ்தர்கள், நூலகங்கள், வாசகர்கள் அனைவரும் ஒரு நூலினை இவ்விலக்கத்தின் மூலம் இனங்காண முடியும்.

எழுத்தாளர்கள் தமது படைப்புக்களை அச்சிடுமுன் தேசிய நூலகத்திற்கு விண்ணப்பித்து ISBN இலக்கத்தைப் பெற்றுக் கொள்ள முடியும். இவ்விலக்கத்தை நூலில் இடம் பெறச் செய்வதன் மூலம் அந்நூலினைச் சர்வதேச ரீதியில் இனங்காணச் செய்தல் சாத்தியமாகும்.

இதைப் போலவே பருவ வெளியீடுகளுக்கும் தேசிய நியமப் பருவ வெளியீட்டு இலக்கம் ISSN வழங்கப்படுகிறது. இதன் மூலம் இலங்கையில் வெளியிடப்படும் பருவ இதழ்களை தேசிய, பிறநாட்டு வாசகர்களுக்கு அறிமுகஞ் செய்து வைப்பதற்கு ஏதுவாகிறது. பருவ இதழ்களுக்கான இத்திட்டம் பற்றி இலங்கைத் தேசிய நூலகத்திலிருந்து விபரங்களைப் பெற்றுக் கொள்ளலாம்.

ஜனாப். ஜெமீல் அவர்கள் மிகவும் சிரமப்பட்டுத் தயாரித்துள்ள இந்நூற் பட்டியல் இஸ்லாமிய இலக்கியத் துறையில் ஈடுபட்டுள்ளோருக்கும், ஏனைய ஆய்வாளர்களுக்கும் இன்றியமையாததொரு சாதனமாகும். மேலும் வருங்காலச் சந்ததியினருக்கு இப்பட்டியல் அரியதொரு முதுசமாகும். அவர்தம் அறிவுத் தேட்டத்திற்குத் துணையாகும் பேரேடாகும்.

ஜனாப். ஜெமீல் அவர்களின் இப்படைப்பு இலங்கை நூலகவியற்றுறையில் பாராட்டுக்குரியதொரு சாதனையாகும். மேலும் முஸ்லிம்களிடையே அவரது முன்னோடியான முயற்சி இத்துறையில் ஈடுபாடுள்ளவர்களை தமிழியல் சார்ந்த பல்வேறு விடயங்கள் பற்றிய நூல் பட்டியலாக்கத்தில் ஊக்குவிப்பதாய் இருக்கின்றது. இதனை அறிவுலகம் வரவேற்று ஆதரிக்குமென்பதில் ஐயமில்லை.

ஜனாப். ஜெமீல் அவர்கள் இத்தகைய இலக்கியப் பணியில் தொடர்ந்து இயங்க எல்லாம் வல்ல இறைவனை இறைஞ்சுகிறேன்.

எஸ்.எம்.கமால்தீன்

கொழும்பு.
01.10.1996.

## அத்தியாயம் 1

# நூல் தேட்டம்

இஸ்லாமிய இலக்கியத் துறைக்கு இந்நூற்றாண்டில் ஆக்கபூர்வமான தொண்டாற்றியுள்ள மர்ஹூம் பேராசிரியர் கலாநிதி கலாசூரி அல்லாமா அல்ஹாஜ் ம.மு. முஹம்மது உவைஸ் அவர்கள் அடிக்கடி எமது அமைச்சுக்கு வரும்போதெல்லாம், இலக்கிய முதுசங்களை அடுத்தடுத்த தலைமுறையினருக்கு விட்டுச் செல்வதைப் பற்றிக் கலந்துரையாடுவார். அவர் பல்கலைக்கழகப் பிரவேச நேர்முகப் பரீட்சைக்குச் சென்ற வேளையில் இஸ்லாமிய இலக்கியத்தைப் பற்றி ஏதுவும் அறியாதிருந்ததைப் பற்றியும், பிற்காலத்தில் அத்துறையில் ஆழ்ந்த ஆய்வில் ஈடுபட்டு, ஈராயிரத்துக்கும் மேலான இஸ்லாமிய இலக்கியங்களை வெளிக்கொணர்ந்த மாபெரும் விடயத்தைப் பற்றியும் பிரஸ்தாபிப்பார். இக்கலந்துரையாடல்களே, என்னுள்ளே பல காலம் புதையுண்டுக் கிடந்த ஓர் எண்ணத்துக்கு வடிவம் கொடுத்தன.

மிக நீண்ட காலமாக என்னிடம் ஒரு பழக்கம் இருந்து வருகிறது. ஏதாவதொரு நூல் என் கைவசம் கிடைத்தவுடன், அதனை வாசிப்பதற்கு முன்பாகவே அதற்குரிய விவரண அட்டையைத் (CATALOGUE CARD) தயாரித்தலே அதுவாகும். காலக்கிரமத்தில் அவை நூற்றுக்கணக்கில் சேர்ந்து விட்டன. ஒருமுறை அவ்வட்டவணைகளை ஒழுங்குபடுத்தித் தருமாறு அட்டாளைச் சேனைக் கல்விக் கல்லூரியின் தற்போதைய தலைவரும்; கடந்த கால் நூற்றாண்டு காலத்துள் பலமுறை என்னோடிணைந்து நற்பணியாற்றியவருமான

மருதமுனையைச் சேர்ந்த ஏ.ஆர்.ஏ.அஸீஸ் அவர்களிட
ஒப்படைத்தேன். அவர் அதனைச் செவ்வனே நிறைவே
றித் தந்தார். அதேபோன்று கல்முனை ஸாஹிராக் கல்லூரியி
கால் நூற்றாண்டுக்கு மேலாகப் பிரதியதிபராகக் கடமையா
றிய எம்.எம்.இப்ராஹீம் அவர்களும் அட்டவணைப்படு
தும் பணியில் உதவினார். இவர்களது இவ்வுதவியினா
இன்று அவற்றை வைத்து நூல் எழுதுவது மிக இலகுவாகி
றது.

இலங்கையில் வெளிவந்துள்ள நூல்கள் பற்றிய விபரங்
ளைப் பெறுவதில் பல இடர்ப்பாடுகள் ஏற்படுகின்றன
இவற்றுள் சில நூல்கள் என் கைவசம் உள்ள காரணத்தினால்
அவை தொடர்பான தகவல்களை மிக இலகுவாகப் பதி
முடிந்தது. ஏனையவற்றைப் பற்றிய விபரங்களை அரசாங்
ஆவணக் காப்பகம் (ARCHIVES), அரும்பொருட்சாலையி
நூலகம்; தேசிய நூலக சேவைகள் சபை; பேராதனை
பல்கலைக்கழக நூலகம் போன்ற இடங்களிலேயே பெறுத
வேண்டும். இத்தேடலுக்கு நேரம், அவகாசம், பொறுமை
என்பன மிக அவசியம். துரதிருஷ்டவசமாக முன்னை
இரண்டும் எனக்கில்லை. ஒரு மாதத்தில் ஓர் அரை நாளைய
வது அதற்கென ஒதுக்கக்கூடிய நிலை எனக்கில்லை.

அக்குறைபாட்டினை நிவர்த்தி செய்பவர்கள் என
மனைவி சித்தி ஆரிபா; மகன் அல்ஹாஜ் நஸீல் எம்.ஜெமீ
ஆகியோராவர். 1966-இல் நாம் விவாகம் முடித்த காலத்தி
ருந்து, எனது கட்டுரைகளைச் சொல்வதெழுதல், தட்டச்
வசதியில்லாத வேளைகளில் இறுதிப்படியெடுத்தல்; ப
வேறு நூல்களிலிருந்து தேவையான குறிப்புக்களைப் பெ
றுத்தரல் என்பனவற்றில் எனது மனைவி உதவி வருகிறா
இவ்விருவருமே பல நாட்கள் கொழும்பு ஆவணக் காப்பக
திலும், தேசிய நூலகத்திலும் தேடுதல்களில் ஈடுபட்டு, அ
வாறு தேடிப்பெற்றவற்றை அட்டைகளில் பதிவுகளாக்கி
தந்தனர். அதனாற்றான் அவற்றினை நிரல்படுத்தி, இக்கட்
ரைத் தொகுதியை எழுதுவது எனக்கு இலகுவாயிற்று.

இத்தேடுதலில் எனது நெருங்கிய உறவுப் பிள்ளைகளான ஏ.கே.எம்.நிஸார், எம்.ஐ.எம்.சித்தீக், எம்.இசட். ஷாஹிட் றிஷாட், செல்வி.இப்திகார் பானு முஸ்தபா, ஏ.எச். எம்.ஸியாத், செல்வி ஷபானா ஜுனைதீன் ஆகியோரும் என்னுடன் பணிபுரியும் எம்.ஆர்.எம்.ஹஜ்ஜிக், எஸ்.எப். எம்.பாதில், செல்வி நபீலா அலி ஆகியோரும் உதவினர்.

*1973 மார்ச் 17ஆம் திகதி பிறந்த இப்திகார் பானு முஸ்தபா கடந்த வருடம் (1995 மே 14) சம்மாந்துறைப் பிரதேச செயலாளர் எம்.ஐ.அமீர் அவர்களை விவாகஞ் செய்து சகல சம்பத்துக்களுடனும் தனது இல்லற வாழ்வை இனிதே ஆரம்பித்தார். எனினும், தனது 23ஆவது வயதில் முதலாவது பிரசவத்தின்போது 4.9.1996 இல் அகால மரணமடைந்தமை மிக மனவருத்தத்தைத் தந்தது. அவருக்கு அல்லாஹ் தஆலா ஜென்னத்துல் பிர்தௌஸை வழங்குவானாக!*

பழம் நூல்களை அல்லது அவை பற்றிய விபரங்களைத் தேடிப் பெறுதல் சிரமமான காரியமாகும். ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்து அவை தொடர்பான ஆவணப் பதிவுகளில் நூல்கள் பற்றிய விபரங்கள் யாவும் ஆங்கில மொழியில் பதியப்பட்டுள்ளன. அதனால் சில வேளைகளில் ஒரு நூலின் சரியான பெயர் என்ன என்பதை அறிவதே சிரமமான காரியமாகிவிடும். உதாரணமாக அக்கரைப்பற்று கருங்கொடித்தீவு ஏ.பி.முஹம்மது யூஸுப் சாஹிப் வெளியிட்ட தமிழ் நூலொன்று JUDGEMENT OF MUSLIMS எனப் பதியப்பட்டுள்ளது. இதன் உண்மையான தமிழ்ப் பெயரென்ன? அதனை அறிவதற்கு அந்நூலையே தேடிப் பெறுதல் வேண்டும். அதற்குப் போதிய நேர அவகாசம் வேண்டும். இச்சிறிய விடயத்திற்கு இத்தனை நாளா என அலுப்புத் தட்டும் வேளைகளும் உண்டு. ஆனால் கடைசியாக நூலைத் தேடிப் பிடித்து அதன் பெயர் 'முஸ்லிம்களின் நீதிமுறைகள்' என அறியும் போது ஏற்படும் மனத்திருப்தி அலாதியானதாகும். இவ்வாறான சந்தர்ப்பங்கள் அடிக்கடி ஏற்படும்.

அத்துடன், எமக்குக் கிடைக்கப் பெறும் பதிவு இடாப்புக்கள் பல்வேறு விதமான தகவல்களைக் கொண்டிருக்கும். நூல்கள், சஞ்சிகைகள், பத்திரிகைகள், அரசாங்க ஆவணங்கள் போன்ற பல்லாயிரக்கணக்கான பதிவுகளுள் எமக்குத் தேவையானவற்றைத் தேடிப் பெறுதலும்; அவசியமாயின் அந்நூலையே தேடி எடுத்தலும் பாரியதொரு பணியாகும். எனினும் வருங்காலச் சந்ததியினருக்கு இத்துறையிலான ஈடுபாட்டினை ஏற்படுத்தவும், ஆய்வினை இலகுவாக்கவும் உதவக்கூடிய பணியாக இது மேற்கொள்ளப்படுகின்றது.

தற்போது நூல் வெளியீட்டுத் துறையில் ஈடுபட்டிருப்போருக்கான ஆலோசனை யொன்றை இவ்விடத்திற் கூறுவது பொருத்தமெனக் கருதுகிறேன். தம்மால் வெளியிடப்படும் புத்தகங்களைப் பற்றிய விபரங்கள் என்றென்றும் நிலைத்திருக்க வேண்டுமென ஒவ்வோர் எழுத்தாளனும் விரும்புவது இயல்பே. அதற்காகத்தான் அச்சகத்தினர் தாம் வெளியிடும் நூல்கள் ஒவ்வொன்றினதும் ஐந்து பிரதிகளை அரசாங்க ஆவணக் காப்பகத்துக்கு அனுப்ப வேண்டுமெனச் சட்டமுண்டு. எனினும் எல்லா அச்சகத்தினரும் இதனைக் கடைப்பிடிக்கின்றார்களா என்பது சந்தேகமே. எனவே நூலாசிரியர்களே தமது வெளியீடுகளின் பிரதிகளை ஆவணக் காப்பகம்; அரும்பொருட்சாலை, தேசிய நூலக சேவைகள் சபை; பல்கலைக் கழக நூலகங்கள்; கொழும்பு பொது நூலகம் போன்ற இடங்களுக்கு அனுப்புதல் அவை என்றும் பாதுகாப்பாயிருக்க உதவும்.

*1994*இல் வெளிவந்த 'சுவடி ஆற்றுப்படை - முதலாம் பாகம்', *1850 - 1949* காலப் பரப்பிலான ஒரு நூற்றாண்டு காலத் தகவல்களைத் தன்னகத்தே கொண்டுள்ளது.

*1950 - 1969* காலப் பகுதியின் தகவல்களை *1995*இல் வெளிவந்த 'சுவடி ஆற்றுப்படை - இரண்டாம் பாகம்' தருகின்றது.

***1970-79, 1980-89, 1990-1995*** ஆகிய தசாப்தங்களின் விபரங்களை இந்நூல் கொண்டுள்ளது.

எனது சமீப கால ஆக்க இலக்கிய முயற்சிகளில் உறுதுணையாகவும் உந்து சக்தியாகவும் இருப்பவர்கள் இருவர். அவர்களுள் ஒருவர் எனது ஆசான் கன்சுல் உலூம் அல் ஹாஜ் எம்.எம்.எம்.மஹரூப். கொழும்பு ஸாஹிராக் கல்லூரியில் விரிவுரையாளராக வாழ்வைத் தொடங்கி, முஸ்லிம் சமய, பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தில் உதவிப் பணிப்பாளராக ஓய்வு பெற்றவர். அறிஞர், சர்வதேச தரத்திலான கட்டுரையாளர். அடுத்தவர் அவரது ஆசான் கன்சுல் உலூம் அல்ஹாஜ் எஸ்.எம்.கமால்தீன். இவரும் கொழும்பு ஸாஹிராவில் உத்தியோக வாழ்வை ஆரம்பித்து, பின்னர் நூலக் துறையில் பாண்டித்தியம் பெற்று கொழும்பு பொது நூலகத்தில் பிரதி நூலகராயும், தேசிய நூலக சேவைகள் சபையில் உதவிப் பணிப்பாளராயுமிருந்து, இஸ்லாமிய நிலையத்தின் கௌரவப் பணிப்பாளராகவும் கடமையாற்றிய ஓர் ஆய்வாளர். அறிஞர். கமால்தீன் அவர்கள் கலாநிதி அல்ஹாஜ் ரி.பி.ஜாயாவின் மாணவரும், ஏ.எம்.ஏ.அஸீஸ் அதிபராயிருந்த காலத்து விரிவுரையாளருமாவார். எனவே, கொழும்பு ஸாஹிராவின் சிறப்புமிக்க வாழையடி வாழை வரலாற்றுப் பாரம்பரிய மரபினை இது எடுத்துக் காட்டுகிறது எனக் கொள்வது பொருத்தமுடையதல்லவா!

இந்நூலின் மூலப் பிரதியை மிகவும் நேர்த்தியாகத் தட்டச்சுச் செய்தவர் செல்வி நபீலா அலி ஆவார். சுதந்திர இலங்கையின் முதலாவது நாடாளுமன்றத்தில் மூதூர்த் தொகுதியின் பிரதிநிதியாயிருந்த மர்ஹூம் ஏ.ஆர்.ஏ.எம். அபூபக்கரின் பேத்தி. மிகவும் புத்திசாலியான நபீலாவுக்குச் சிறந்த எதிர்காலமுண்டு. அவரது நல்வாழ்வுக்கு அல்லாஹ் அருள் புரிவானாக!

## அத்தியாயம் 2

# 1970 - 1979

19ஆம் நூற்றாண்டிலும் 20ஆம் நூற்றாண்டின் ஆரம்பத்திலும் வெளிவந்த நூல்களைப் பற்றிய தரவுகளைப் பெறுவதில் ஏற்படும் இடர்பாடுகளை இந்நூலின் முதலாம் பாகத்திற் குறிப்பிட்டோம். 1970-79-ஆம் ஆண்டையதான இத்தசாப்தத்திலும் இதற்குப் பின்னருள்ள காலப்பகுதியிலும் வெளிவந்துள்ள நூல்களைப் பற்றிய தரவுகளைப் பெறுதல் ஓரளவு இலகுவானதாகும்.

1970 இற்குப் பின்னர் இலங்கை முஸ்லிம்களினால் வெளியிடப்பட்ட நூல்களுள் அநேகமானவை என் வசம் உள்ளன. ஏற்கனவே குறிப்பிட்டுள்ளது போன்று எனது நூல் சேகரிக்கும் பழக்கம் 1950களில் ஆரம்பமானது. அப்பழக்கம் 1970களில் உத்வேகம் அடைந்ததன் காரணமாக என்வசம் திரண்டுள்ள நூல்களிலிருந்து அநேகத் தகவல்களைப் பெற முடிகின்றது.[1]

இக்காலப் பரப்பிற்கான தகவல்களைப் பெறுவதற்கான அடுத்த மார்க்கம் "இலங்கைத் தேசிய நூற் பட்டியல்" ஆகும். இலங்கையில் வெளியிடப்படும் புத்தகங்களின் விபரங்களைக் கொண்டதே இந்நூற் பட்டியல். அச்சிட்டோர், பிரசுரிப்பாளர் கட்டளைச் சட்டத்தின் படி (அதிகாரம் - 179) புத்தகங்களையும், பத்திரிகைகளையும் பதிவு செய்யும் பகு

1. இவ்வரிய நூல்களுள் ஆயிரத்துக்கு மேற்பட்டவை சாய்ந்தமருது பொது நூலகத்துக்கு அன்பளிப்பாக 1993இல் வழங்கப்பட்டு, இன்று அங்கு உபயோகித்திலுள்ளன.

திக்கு சமர்ப்பிக்கப்பட்டு ப்திவு செய்யப்பட்ட பிரசுரங்களை இது அடிப்படையாகக் கொண்டது. இது தேசிய சாசனத் திணைக்களத்தில் இயங்கும் தேசிய நூல் வரலாற்றியல் அலுவலகத்தினால் பல்லாண்டுகளாகத் தயாரிக்கப்பட்டு வந்தது. ஆனால் தற்போது இலங்கைத் தேசிய நூலக சேவைகள் சபையினால் இப்பணி மேற்கொள்ளப்படுகிறது.

எனினும் இப்பட்டியலில் பல நூல்கள் விடுபடுவதற்கான சந்தர்ப்பங்களும் உண்டு. அச்சகத்தாரினாலும், பிரசுரிப்பாளர்களினாலும் தாமாக அனுப்பப்படும் நூல்களையே இது கொண்டுள்ளது. அவ்வாறு கிரமமாக அனுப்பாது விடும் பல அச்சகத்தினர் உள்ளனர். அதனால் இலங்கையில் அச்சிடப்படும் பல நூல்கள் தேசிய நூலக சேவைகள் சபைக்குக் கிடைக்காத வரை அவை கணக்கெடுப்பில் சேருவதில்லை. இலங்கைக்கு வெளியே அச்சிடப்படும் நூல்களும் இப்பட்டியலில் சேர்வதில்லை. இக்காரணங்களினால் பல நூல்கள் இலங்கைத் தேசிய நூற் பட்டியலில் இடம்பெறாமல் உள்ளன.

எனவேதான், ஏற்கனவே எனது சொந்த நூலகப் பட்டியலிலும் தேசிய நூற் பட்டியலிலும் இருந்து பெறப்பட்ட அட்டவணைகளில் ஏதாவது விடுபட்டிருந்தால் அவற்றினையும் சேர்க்க வேண்டும் எனும் எண்ணத்தில் இந்நாட்டில் எழுத்து, பிரசுரத் துறைகளில் ஈடுபாடுள்ள சுமார் 400 பேர்களுக்குப் பின்வரும் கடிதத்தை அனுப்பி விபரம் கோரினோம்.

"1850 ஆம் ஆண்டு முதல் 1949ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் இலங்கை முஸ்லிம்களினால் வெளியிடப்பட்ட நூல்களின் விபரங்கள் "சுவடி ஆற்றுப்படை - முதலாம் பாகம்" எனும் நூலாகவும்; 1950 முதல் 1969 வரையான வெளியீடுகள் "சுவடி ஆற்றுப்படை - இரண்டாம் பாகம்" எனும் நூலாகவும் வெளிவந்துள்ளதைத் தாங்கள் அறிவீர்கள்.

இவ்விரு நூல்களும் மிக்வும் பிரயோசனமும் பெறுமதியும் வாய்ந்தவைகள் என்ப் பலரும் அபிப்பிராயப்படுகின்ற காரணத்தினால், இப்பணியின் தொடர்ச்சியாக 1970ஆம் ஆண்டிலிருந்து 1995ஆம் ஆண்டு வரையான நூல் வெளியீடுகள் பற்றிய தரவுகளைச் சேகரிப்பதில் தற்பொழுது கலாசார, சமய அலுவல்கள் அமைச்சின் முஸ்லிம் பிரிவும்; முஸ்லிம் சமய, பண்பாட்டலுவல்கள் திணைக்களமும் ஈடுபட்டுள்ளன.

இன்றைய ஆய்வாளர்களுக்கும் மாணவர்களுக்கும் இப்பிரசுரங்கள் மிகவும் பிரயோசனமான வழிகாட்டியாக இருக்கும் என்பதோடு, இன்னும் சில தசாப்தங்களின் பின்னர் மிகவும் உபயோகமான கையேடாயும் அமையும் என்ற காரணத்தினால் இப்பணியை மேற்கொண்டுள்ளோம்.

1970ஆம் ஆண்டுக்குப் பின்னர் இலங்கை முஸ்லிம்களினால் வெளியிடப்பட்டுள்ள 500க்கும் மேற்பட்ட நூல்களின் தரவுகள் இதுவரை எம்மால் சேகரிக்கப்பட்டுள்ளன. இருப்பினும் இன்னும் சில விடுபட்டிருக்கலாம் என எண்ணுகிறோம். எம்மால் வெளியிடப்படும் நூலில் இத்தகைய குறையேதும் ஏற்படாதிருப்பதற்காக இலக்கியத் துறையிலும் வெளியீட்டுத் துறையிலும் தாங்கள் ஈடுபாடுள்ளவர் என்ற காரணத்தினால் இக்கடித்தைத் தங்களுக்கு எழுதுகிறோம்.

எனவே, இதுவரை தங்களால் வெளியிடப்பட்டுள்ள நூல்களின் விபரங்களைப் பின்வரும் ஒழுங்கின் பிரகாரம் இக்கடிதம் கிடைத்து ஒரு மாதத்தினுள் எமக்கு அனுப்பி வைக்குமாறு வேண்டுகிறோம்.

நூலாசிரியரின் பெயர், நூலின் பெயர், வெளிவந்த இடம், வெளியீட்டாளர், அச்சகம், ஆண்டு, மொத்தப் பக்கங்கள், விலை, நூல் பற்றிய சிறு குறிப்பு (இரு வரிகளுக்கு மேற்படாது)"

நாம் அனுப்பிய மேற்கூறிய கடிதத்துக்குப் பலர் பதில் அனுப்பியிருந்தனர்.

தினகரன், வீரகேசரி தினபதி, சூடாமணி, உதயம், பார்வை ஆகிய பத்திரிகைகள் மூலம் விபரங்கள் கேட்டு நாம் விடுத்த வேண்டுகோளுக்கும் பலர் தகவல்களை அனுப்பியிருந்தனர்.

இத்தகைய வழிகளின் மூலம் பெறப்பட்ட தரவுகளை இவ்வத்தியாயம் கொண்டுள்ளது.

இதற்கு முந்திய தசாப்தங்களைப் போன்று 1970-79 காலப் பகுதியிலும் தமிழ் மொழி மூலமே அநேக நூல்கள் வெளிவந்துள்ளன. அவ்வாறான தமிழ் நூல்கள் வருமாறு:

(முதலாவது வரி நூலாசிரியரின் பெயர், அடுத்து முறையே நூலின் பெயர், வெளிவந்த இடம், வெளியீட்டாளர், அச்சகம், ஆண்டு,மொத்தப் பக்கங்கள்; விலை என்பன வற்றைக் குறிக்கும். ஆயினும் எல்லா நூல்களுக்கும் இத்தகைய விபரங்களைப் பெறுதல் கஷ்டமாகும்.)

554. எஸ்.எம்.அஹமத்
குர்ஆனின் ஒளி
கல்முனை/முஸ்லிம் புத்தகக் கழகம்
1970 ஜனவரி
79

555. ஏ.எல்.எம்.உதுமாலெப்பை மௌலவி
இஸ்லாம் வகுக்கும் வழி
பாலமுனை
1970 ஜனவரி
64, ரூ.1.50

556. அ.லெ.அப்துல் காதர் லெப்பை
முறையீடும் தேற்றமும்
கண்டி/ இலங்கை இஸ்லாமிய எழுத்தாளர் இயக்கம்
1970 செப்டம்பர் 7
99, ரூ.1/-

557. ம.மு.உவைஸ்
நீதியும் நியாயமும்
சென்னை
சாஹுல் ஹமீத் அன் சன்ஸ்
1970

558. ஜே.எம்.எம்.அப்துல் காதர்
புதுக்குஷ்ஷாம் (காண்டம்: சித்தீக்கியா) - உரை
மூலம்: செய்கு அப்துல் காதிர் நயினார் ஆலிம்
கொழும்பு
சபீனா பதிப்பகம்
19970
401, ரூ.6/-

559. எச்.சலாஹுத்தீன் மௌலவி
மிஸ்வாக்
கல்ஹின்னை
சிபா பதிப்பகம்
1970
12, 25 சதம்

560. எச்.சலாஹுத்தீன் மௌலவி
99 அழகுத் திருநாமங்களும் அவை ஆற்றும்
அற்புதங்களும்
கல்ஹின்னை
சிபா பதிப்பகம்
1970
20, ரூ.1/-

561. எச்.சலாஹுத்தீன் மௌலவி
ஏழு சூறாக்கள்
கல்ஹின்னை
சிபா பதிப்பகம்
1970
24, இலவசம்

562. எச்.எம்.பி.முஹிதீன்
அவாந்தி கதைகள்
கொழும்பு
அரசு வெளியீடு
1970
66, ரூ.2/-

563. ஷேக் முகையுதீன் குருபாவா
ஞானஒளி மாலை
கொழும்பு
1970
172

564. மருதூர்வாணர்
முதலிரவு
மருதமுனை
தேன்மதி வெளியீடு
1970
40, ரூ.1.50

565. எம்.ஏ.ரஹ்மான்
காந்தி போதனை
கொழும்பு
அரசு வெளியீடு
1970
168, ரூ.4.50/-

566. ஆசாத் மௌலானா
கமால் அப்துல் நாசர்
கொழும்பு
வளர்பிறை வாலிபர் வெளியீடு
1970
20, 50 சதம்

567. செ.மு.மு.இப்ராஹீம் ஆலிம்
மிஃறாஜ் ஸலவாத்
நிந்தவூர்
1970
14

568. ச.த.மு.சதக்குத்தம்பி
சிறீலங்கா சுதந்திர கீதம் அல்லது மரதன் ஓட்டமணிஒலி
மாத்தளை
எஸ்.டீ.எம்.சாஹிப்
1970
59, ரூ.2.50

569. அப்துல் மஜீத் அஹ்மத் முபாரக்
இன்ஸான் மாலை
தெஹிவளை
1970
37

570. எம்.எல்.அப்துல் காதீர்
மாமேதை மௌலானா அபுல் அஃலா மௌதூதி
துந்துவ, ஹப்புருகல
இஸ்லாமிக் ஸ்டடி சேர்க்கிள்
1970
24, 60 சதம்

571. ஏ.எம்.அப்துல் அஸீஸ்
இஸ்லாம் காட்டும் ஆரோக்கிய வாழ்வு
திருகோணமலை
1971 மார்ச் 15
136, ரூ.2.75

572. எம்.கே.ஈ.அபுல் ஹஸன் மௌலவி
இஸ்லாத்தில் சீதனம் அனுமதிக்கப்பட்டதா?
கொழும்பு
1971 மே 23

573. ஏ.இக்பால்
மறுமலர்ச்சித் தந்தை (எம்.ஸி.சித்திலெப்பை)
1971 ஜூன் 11
84, ரூ.2.50/-

574. மஹ்ரூப் கரீம்
எண் வரலாறு
அட்டாளைச்சேனை
முஸ்லிம் ஆசிரியர் கலாசாலை
1971 செப்டம்பர் 10
160

575. முஹம்மது இப்னு அஹ்மது ஆலிம் (கசாவத்தை ஆலிம்)
தீன்மாலை
அக்குறனை
எம்.ஜே.எம். சயீத் சௌலதீ
1971
14.

576. த.சா.அப்துல் லத்தீப்
திருக்குர்ஆனும் இயற்கையும்
வெலிகாமம்
1971
310, ரூ.3.75

ரி.எஸ்.அப்துல் லத்தீப் அவர்களைப் பற்றி இவ்விடத் திற் குறிப்பிடுதல் பொருத்தமாகும்.

இலங்கையின் கல்விப் பணிப்பாளராயிருந்த எல்.மக்கிறே என்பார் தமது 1923-ஆம் ஆண்டறிக்கையில் பின்வருமாறு குறிப்பிட்டார்:

"வெலிகாமம் முஸ்லிம் வித்தியாலயத்தின் பழைய மாணவரொருவர் இவ்வருடம் கோப்பாய் ஆசிரியர் கலாசா

லையிற் பிரவேசித்தார். இந்நாட்டின் வரலாற்றிலேயே முஸ் லிம் மாணவரொருவர் ஆசிரியர் கலாசாலைக்கு அனுமதி பெறுவது இதுவே முதல் தடவையாகும்.''

இப்புகழைப் பெற்றவர் மாத்தறை மாவட்டம் வெலிகம மதுரகொடையைச் சேர்ந்த மர்ஹூம் அல்ஹாஜ் ரி.எஸ்.அப் துல் லத்தீப் அவர்களாவார்.

1900ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 9ஆம் திகதி பிறந்த அப்துல் லத்தீப் அவர்களின் தந்தை தம்பிசாகிப் மத்திச்சம்; தாயார் அலிமா உம்மா. 1910ஆம் ஆண்டிலிருந்து தனது ஆரம்பக் கல்வியை வெலிகாமம் முஸ்லிம் வித்தியாலயத்திற் பெற்றார். முஸ்லிம்கள் கல்வியில் அவ்வளவு அக்கறையில் லாதிருந்த காலமது. அத்தகைய காலகட்டத்தில் தனது கல்வி யைக் கைவிடாது தொடர்ந்து கற்று, 1921இல் இப்பாடசா லையிலேயே உதவியாசிரியரானார். இரு வருடங்களின் பின்னர் 1923ஆம் ஆண்டு கோப்பாய் அரசினர் ஆசிரிய கலாசாலைக்கு அனுமதி பெற்றார். இச்சம்பவத்தினையே கல்விப் பணிப்பாளர் மக்கிறே தமது ஆண்டறிக்கையிற் குறிப்பிட்டுள்ளார்.

கோப்பாய் ஆசிரியர் கலாசாலையிற் கற்கின்ற காலத்திற் தமது கல்விசார் படிப்பில் மட்டுமல்லாது தமது தமிழறிவிலும் மிகவும் சிறந்து விளங்கிய காரணத்தினால் 'தமிழிற் சூரியன்' எனும் பட்டம் யாழ்ப்பாணத்தில் அவருக்கு வழங்கப்பட் டது. பிற்காலத்தில் இவரால் எழுதப்பட்ட நூல்களில் அவரது ஆழ்ந்த தமிழ்ப் புலமையைக் காணக்கூடியதாகவுமுள்ளது.

1925இல் இலங்கையின் முதலாவது முஸ்லிம் பயிற்றப் பட்ட ஆசிரியரான இவர், முதலில் காலி மல்ஹருஷ் சுல் ஹியா வித்தியாலயத்திலும்; 1928இலிருந்து மாத்தறை முஸ் லிம் பாடசாலையிலும் உதவி ஆசிரியராகப் பணிபுரிந்த பின்; 1935இல் வெலிகம முஸ்லிம் வித்தியாலயத்தின் தலைமையா சிரியராகப் பதவியேற்றுப் பதினொரு வருடங்கள் அங்கு கடமையாற்றினார். இவரது காலத்திலேயே இப்பாடசாலை

யில் எஸ்.எஸ்.சி. வகுப்புகள் ஆரம்பிக்கப்பட்டன. அதனாற் பல அயலூர் மாணவர்களும் இங்கு கல்வி கற்றனர். அளுத் கமை அரசினர் ஆசிரியர் கலாசாலை ஆரம்பிக்கப்பட்ட பொழுது அங்கு முதன் முதல் அனுமதி பெற்ற இருபது பேருள் ஏழு பேர் வெலிகாமத்தைச் சேர்ந்தோராவர்.

1946இல் இங்கிருந்து இடமாற்றம் பெற்று திக்குவல்லை முஸ்லிம் வித்தியாலயத்திலும் 1948இலிருந்து களுத்துறையி லும் கடமையாற்றி 1.5.1958இல் ஓய்வு பெற்றார். அவ்வரு டமே தனது ஹஜ் கடமையையும் நிறைவேற்றினார். தனது ஓய்வு காலத்தை சமய, சமூக, எழுத்துத் துறைகளிற் செல விட்ட அப்துல் லத்தீப் அவர்கள் 10.3.1977-இல் இறையடி எய்தினார்.

ஆசிரியப் பணிபுரிந்த காலத்தில் மார்க்கத் தொண்டிலும் மிகுந்த அக்கறை காட்டினார். இவரது முயற்சியினால் ஜம் இய்யதுல் இஸ்லாமியத்துல் கைரியா சங்கம் 1942இல் ஆரம் பிக்கப்பட்டு, அச்சங்கத்தின் முயற்சியினால் மஸ்ஜித் ஒன்றும் கட்டப்பட்டது.

அப்துல் லத்தீப் அவர்களின் முதலாவது நூல் 1936இல் வெளிவந்துள்ளது. "நபிகள் நாதர் முஹம்மது (ஸல்) உலக இரட்சகத் தூதர்" எனும் இந்நூலுக்கான மதிப்புரையில் "........ யுத்த தர்மம், பலதார மணம், பொதுவுடைமைத் திட்டத்திலும் ஸக்காத் சிறந்ததென்பது, மற்றும் இஸ்லாமியக் கொள்கைகளுடன் ஏற்புழிக் கோடலாக அமைவது இவ்வப் பியாசத்தில் காலத்துக் கேற்ற திருத்தமாகும். இச்சிறு வெளி யீடு முஸ்லிம்களுக்கு மாத்திரமல்ல, தமிழ் மொழியுடையார் யாவருக்கும் பெரிதும் இன்பந் தருமென்பது எம் துணிபு. இத்தகைய பிரசுரங்கள் சிங்களத்திலும் மொழிபெயர்க்கப்ப டின், அது சிங்களச் சகோதரர்களுக்கு நாம் செய்யும் பேருதவி யாகும்; மார்க்கத் தொண்டாகும்" என ஏ.ஆர்.எம்.சகரிய்யா (பஹ்ஜி), யு.எல்.எம். ஹாமீம் (பஹ்ஜி), பீ.எம்.எஸ்.ஹு ஸைன் (பாகவி), மௌலவி பாளில் என்போர் கூட்டாகக் கூறியிருப்பது மிகப் பொருத்தமானதே.

*1971*இல் வெளிவந்த 'திருக்குர்ஆனும் இயற்கையும்' எனும் நூல் அப்துல் லத்தீப் அவர்களின் ஆழ்ந்த இஸ்லாமிய அறிவினையும் ஆய்வுத் திறனையும் தமிழ் மொழிப் புலமையையும் எடுத்துக்காட்டுகின்றது. 30 அத்தியாயங்களையும் *310* பக்கங்களையும் கொண்ட இந்நூல் சிறந்தவொரு ஆய்வு வெளிப்பாடாகும். இவ்வாய்வில் அவர் பல்லாண்டுகளைச் செலவிட்டிருக்க வேண்டும்.

'திருக்குர்ஆனும் இயற்கையும்' எனும் இந்நூலை எழுதுவதற்கான ஆர்வம் *1942*ஆம் ஆண்டு தனக்கேற்பட்டதாக இந்நூலுக்கான முகவுரையில் அப்துல் லத்தீப் குறிப்பிடுகிறார். பிறமத நண்பரொருவருடன் உரையாடிக் கொண்டிருக்கும் பொழுது, அந்நண்பர் இஸ்லாத்தைப் பற்றிப் பல தவறான எண்ணங்களைக் கொண்டிருந்ததை அறிந்து, அவ்வாறானோர் இஸ்லாத்தைப் பற்றி நன்கு அறிந்து கொள்ளும் வண்ணம் நூலொன்றை வெளியிட வேண்டுமெனும் உந்துதலை இவருக்கு ஏற்படுத்தியது. அதன் வெளிப்பாடே 'திருக்குர்ஆனும் இயற்கையும்' எனும் நூலாகும்.

எனவே, முஸ்லிம் சமூகத்தின் முதற் பயிற்றப்பட்ட ஆசிரியர் தலைசிறந்த ஆசானாக மட்டுமன்றி, இஸ்லாமிய ஆய்வாளனாகவும், எழுத்துவன்மை மிக்கவனாகவும், தமிழ்ப் புலமை வாய்ந்தவனாகவும், சமூக சேவையாளனாகவும் விளங்கியமை பெருமைக்குரியதே.

577. மௌலவி எச்.சலாஹுத்தீன்
தவ்பா
கண்டி
*1971*
*7*

578. மௌலவி எச்.சலாஹுத்தீன்
அஹது நாமா
கல்ஹின்னை/ சிபா பதிப்பகம்
*1971*

579. சாரணா கையூம்
கவிதை நெஞ்சம்
பதுளை/ ஸாபியா வெளியீடு
1971
50, ரூ.1.25

580. எஸ்.எம்.அஹமத்
குர்ஆனுடைய ஆட்சியிலே மனிதனின் வாழ்க்கை
கல்முனை/ முஸ்லிம் புத்தக சங்கம்
1971
70

581. மு.க.அப்துல் ஹன்னான் ஆலிம் புலவர் +
ச.த.மு.சதக்குத்தம்பி
புகழ்மணிப் போற்றுப்பா
கொழும்பு
1971
16

582. ரீ.எம்.ஷாஹுல் ஹமீத்
கீத போதனா ரஞ்சிதம்
கொழும்பு/ சர்வதேச இஸ்லாமிய மன்றம்
1972 ஏப்ரல் 27
59

583. அ.வா.மஹ்ரூபு
நபவியா வழிவகுத்த நல்லவர்கள்
மள்வானை
1972 மே 24
244

584. அ.ஸ.அப்துல் ஸமது
இஸ்லாம் வழிகாட்டி க.பொ.த. (சா.த)
கல்முனை/ மணமகள் புத்தகசாலை
1972 நவம்பர் 10
149, ரூ.3.50

585. ஆ.மு.ஷரிபுத்தீன்
வீராங்கனை சைதா
கொழும்பு/ அரசு வெளியீடு
1972
8, 25 சதம்

586. ஜே.எம்.பதுர்தீன் மௌலானா
முஸ்லிம் முதுரை
அட்டாளைச்சேனை
1972
62, ரூ.1.50

587. ஆலங்கீர் ஜவஹர்
மக்கள் தலைவர் மஜீத்
மூதூர்/ முற்போக்கு வாலிபர் மன்றம்
1972
36, ரூ.1.25

588. வித்துவான் எம்.ஏ.ரஹ்மான்
திருக்குர்ஆன் குறள்
கொழும்பு
1972
61

589. மௌலவி எச்.சலாஹுத்தீன்
ஓதுங்கள் ஸலவாத்
கல்ஹின்னை/ சிபா பதிப்பகம்
1972
20, இலவசம்

590. எம்.ஏ.ரஹ்மான்
இஸ்லாமிய வரலாற்றுக் கதைகள்
கொழும்பு/ அரசு வெளியீடு
1972
112, ரூ.1.90

008303

591. முஹம்மது ஹாஜி இப்னு அஹமது லெப்பை
இலுஹாறுல் முஃஜிஸாத் பீஸலாத்தி அஸ்றபில்
மௌஜூதாத்
காத்தான்குடி/ கே.எம்.எம்.ஹஸன் மௌலவி
1972
24, 60 சதம்

592. குத்தாமுத்தீன்
தப்லீக்கின் ஆறு திட்டங்கள்
கொழும்பு
1972
78

593. எம்.ஈ.எச்.எம்.தௌபீக்
நெஞ்சம் கவர்ந்த நாசர்
கிண்ணியா/ மாணவர் மன்றம்
1972
19, 50 சதம்

594. அப்துர் ரவூப் மௌலவி
அலவியா கோட்டைக்குள் அவ்லியாக்கள் இருவர்
காலி/ஜிப்ரியா வெளியீடு
1972
22

595 எஸ்.எம்.ஏ.ஹஸன்
அருள்வாக்கி அப்துல் காதிர்
கண்டி/இலங்கை இஸ்லாமிய எழுத்தாளர் இயக்கம்
1973 ஜனவரி
82, ரூ.2.50

596. ஏ.எல்.அப்துல் மஜீத் எம்.பி.,
நமது பாதை
தோப்பூர்/ அரசு வெளியீடு
1973 மே 11
40, ரூ.2/-

597. யூ.எல்.எம்.குவைலீத்
(மறையும் நிழல்)
ஒளிப்பாதையில் ஸாஹிரா
உக்குவளை
1973 மே
26.

598. ம.மு.உவைஸ்
தமிழ்க் காப்பியங்களில் இடம்பெற்றுள்ள அறபுச் சொற்கள்
திருச்சி/முதலாவது அனைத்துலக இஸ்லாமியத் தமிழ் இலக்கிய ஆராய்ச்சி மாநாடு
1973
20, இலவசம்

599. ம.மு.உவைஸ்
திருக்குர்ஆனும் முஸ்லிம் மக்களின் தமிழ்ப் பேச்சு வழக்கும், இலக்கிய வழக்கும்
பாணந்துறை
1973
41, இலவசம்

600. ம.மு.உவைஸ்
இஸ்லாமிய அடிப்படையில் தோன்றிய தமிழ்க் காப்பியங்கள்
பாணந்துறை
1973
82

601. ஏ.எம்.அபூபக்கர்
பாலியற் பிரச்சினைகள்
சாய்ந்தமருது
1973
114, ரூ.4/-

602. மௌலவி எச்.சலாஹுத்தீன்
அளவை நிறுவை
கல்ஹின்னை/ சிபா பதிப்பகம்
1973
20, 25 சதம்

603. வை.எல்.எம்.நளீம்
புர்தா ஷெரீப் அறபித் தமிழ்ப்பாடல்
பலாங்கொடை
1973
64

604. எஸ்.எம்.முஸ்தபா மௌலானா
தொழுகை விபரம்
கல்முனை/ மணமகள் புத்தகசாலை
1973
87, ரூ.2.50

605. அன்பு ஜவஹர்ஷா
சிதைந்து போகும் சிறப்புக்கள்
அநுராதபுரம்
1973
16, ரூ.2/-

606. அன்பு ஜவஹர்ஷா
புத்துலகம் படைப்போம்
அநுராதபுரம்
1973
20, ரூ.4/-

607. மு.முஹம்மது இக்பால்
மறைநிழலில் மனிதன்
மன்னார்/ அன்ஸாரி நூலகம்
1973
22

608. அப்துல் ஹமீத் அல் பக்ரி
நபியின் நற்குணங்கள்
கல்முனை
1973

609. அபுல் ஹஸன் முஹம்மத்
கப்துறை ஸியாரத்தின் அற்புதச் சரிதை
வெலிகாமம்/ இஸ்லாமிய பிரசார சபை
1973
9

610. இரட்சகர் யார்? அவர்தான் இறைதூதர் முஹம்மத் (ஸல்) அவர்கள் என்கிறார் யேசு நாதர்
கொழும்பு/ இலங்கை முஸ்லிம் பிரசார சபை
1973
34

611. கே.எஸ்.ஏ.கபூர்
தமிழினத்தின் விடுதலைக் குரல்
கோப்பாய்
1973
86

612. எம்.எஸ்.எம்.அமீன்
கிழக்கிலங்கையில் மறுமலர்ச்சித் தந்தை (அல்ஹாஜ் கலாநிதி பதியுத்தீன் மஹ்மூத்)
மருதமுனை/ இஸ்லாமிய சோசலிஷ முன்னணிக் கிளை
1974 மார்ச் 7
22

613. எச்.எம்.பி.முஹிதீன்
அறிஞர் அஸீஸ்-சில நினைவுகள்
கொழும்பு/ கலசம் பப்ளிகேஷன்ஸ்
1974 மே 21
112 ரூ.4.25

614. ம.மு.உவைஸ்
இஸ்லாமிய இலக்கியத்தின் திருச்சித் திருப்பம்
கொழும்பு
1974 மே 28
136 இலவசம்

615. ம.மு.உவைஸ்
முஸ்லிம்களின் பேச்சு வழக்கில் பயன்படும்
செந்தமிழ்ச் சொற்கள்
கொழும்பு
1974
32, இலவசம்

616. அ.லெ.அப்துல் காதர் லெப்பை
கார்வான் கீதம்
பதுளை/ அல்அதான் ம.வி.பழைய மாணவர்கள்
1974
28, ரூ.2/-

617. எஸ்.எம்.ஏ.ஹஸன்
கலாநிதி பதியுத்தீன்
கண்டி/ இலங்கை இஸ்லாமிய எழுத்தாளர் இயக்கம்
1974
200, ரூ.15/-

618. நயீமா ஏ.பஷீர்
வாழ்க்கைப் பயணம்
கொழும்பு/ வீரகேசரி வெளியீடு
1974
129, ரூ.3.40

619. அன்பு ஜவஹர்ஷா
பொறிகள்
அநுராதபுரம்
1974
16, ரூ.2/-

620. மாமா (என்.எம்.ஹனிபா)
இலட்சியப் பெண்
கல்ஹின்னை, பட்டகொலாதெனிய/ கலா நிலையம்
1974
184, ரூ.5/-

621. அபுல் ஹஸன் முஹம்மத்
நீதிமன்றத்தில் வெற்றி பெற வேண்டுமா?.
வெலிகாமம்/ இஸ்லாமிய பிரசார சபை
1974
32, ரூ.1/-

622. ஏ.சீ.எம்.சுப்யான்
வளர்ச்சிக்குப் பின்னணி
கொழும்பு/ கல்வி வெளியீட்டுத் திணைக்களம்
1974
25

623. அமைச்சரின் நடனமும் ஆலிம்களின் தாளமும்
கொழும்பு/ முஸ்லிம் ஐக்கிய முன்னணி
1974
16

624. முஸ்லிம் பிள்ளைகள் நடனம் பயிலலாமா - லலித கலைகள் பற்றிய இஸ்லாத்தின் ஆதாரபூர்வமான கருத்துக்கள்
பேருவளை
1974
28

625. எம்.எஸ்.எம்.இக்பால், கா.சிவத்தம்பி, எம்.எச்.எம். ஷம்ஸ், ஏ.இக்பால்
எச்.எம்.பீ.யின் அறிஞர் அஸீஸ் - சில நினைவுகள் - நூல் விமர்சனம்
கொழும்பு/ சிறீலங்கா முஸ்லிம் எழுத்தாளர் மஜ்லிஸ்
1975 மார்ச் 13
75, ரூ.2.90

626. ஏ.எம்.எம்.மன்சூர்
முஸ்லிம்களின் கலாசார மறுமலர்ச்சிக்கான ஒரு மாதிரித் திட்டம்
கொழும்பு/ எம்.எச்.எம்.அஷ்ரஃப் - முஸ்லிம் ஐக்கிய முன்னணி
1975 மே 6
9

627. கலைவாதி கலீல்
உலகை மாற்றிய உத்தமர்
மன்னார்
1975 மே
46

628. முர்ஷி பாத்ஷா
இஸ்லாமிய சமூக அமைப்பும் இலங்கை முஸ்லிம்களும்
பேருவளை/ வாலிபர் மன்ற வெளியீடு
1975 ஜூன் 10
64, ரூ.3.25

629. எஸ்.பொன்னுத்துரை
இஸ்லாமும் தமிழும்
கொழும்பு/ இஸ்லாமிய வாலிபர் இயக்கம்
1975 ஜூலை 26
100, ரூ.3/-

630. பளீல் காரியப்பர்
வெள்ளிவிழா (சம்மாந்துறை முஸ்லிம் மகா வித்தியாலயம்)
சம்மாந்துறை
1975 நவம்பர் 4
25, ரூ.2/-

631. கலாநிதி பதியுத்தீன் மஹ்மூத்
நான் அறிந்த பண்டாரநாயக்க
கொழும்பு/ கல்வி வெளியீட்டுத் திணைக்களம்
1975
36

632. முக்தார் ஏ.முஹம்மத்
இஸ்லாமிய நாகரீகம்
சீனன்கோட்டை/ பேருவளை வை.எம்.எம்.ஏ.
1975
278, ரூ.13.50

633. எஸ்.எம்.ஏ.ஹஸன்
நெஞ்சத் தாமரையின் இன்ப நினைவுகள் (இந்தியப் பயணம்)
கண்டி/ இலங்கை இஸ்லாமிய எழுத்தாளர் இயக்கம்
1975
78, ரூ.3.50

634. எம்.எச்.எம்.புஹாரி மவ்லவி
நாயகப் புகழாரம்
காத்தான்குடி
1975
60, 30/-

635. ஜுனைதா ஷெரீப்
அவள் ஒன்று நினைக்க
கொழும்பு/ ஜனமித்திரன் வெளியீடு
1975
240.

636. வித்துவான் எம்.ஏ.ரஹ்மான்
பொன்மொழி மாலை
மதுரை
1975

637. அன்பு ஜவஹர்ஷா
காவிகளும் ஒட்டுண்ணிகளும்
அநுராதபுரம்
*1975*
*32,* ரூ.*5/-*

638. ஏ.ஜே.எம்.இஸ்மாயில்
உம்மத்துன் நபி
கஹவத்த
*1975*
*34*

639. எம்.எம்.இக்பால்
ஏழை எழுத்தாளன்
யாழ்ப்பாணம்/ கலை அபிவிருத்திக் கழகம்
*1975*
*40*

640. எம்.எம்.உவைஸ்
இஸ்லாமும் இன்பத் தமிழும்
சென்னை/ யுனிவர்சல் பப்ளிஷர்ஸ்
*1976* ஜனவரி *1*
*262,* இந்திய ரூபா *1/-*

641. எம்.எம்.உவைஸ்
தமிழ் இலக்கியத்தில் முஸ்லிம் காப்பியங்கள்
சென்னை/ செம்மல் பதிப்பகம்
*1976* ஜனவரி *15*
*480,* ரூ.*60/-*

642. வை.அஹ்மத்
புதிய தலைமுறைகள்
கொழும்பு/ வீரகேசரி பிரசுரம்
*1976* ஜனவரி
*129,* ரூ.*3.60*

643. எம்.எம்.உவைஸ்
மட்டக்களப்பு நாட்டுப் பாடல்களில் இடம்பெற்றுள்ள இஸ்லாமிய அம்சங்கள்
மட்டக்களப்பு/ உலகத் தமிழ் ஆராய்ச்சி நிலையத்தின் பிராந்திய மகாநாடு
1976 மார்ச் 19
32, இலவசம்

644. கலாநிதி உவைஸ் மலர்
கொழும்பு
1976 மே 19
96, இலவசம்

645. ஜமாலிய்யா ஸய்யிது கலீல் அவுன் மௌலானா அல் ஹாஷிமிய்யா
பேரின்பப் பாதை
வெலிகாமம்/ ஏகத்துவ மெய்ஞ்ஞான சபை (சேலம்)
1976 மே
78

646. எம்.எம்.உவைஸ்
சீறாப்புராணத்தில் இடம் பெற்றுள்ள அறபுச் சொற்களும் பாரசீகச் சொற்களும்
கொழும்பு/ அல்பியன் பிரஸ்
1976 ஆகஸ்ட் 15
89.

647. நாகூர் ஏ.பாவா
நமது செல்வம்
காத்தான்குடி
1976 ஆகஸ்ட் 16
64, ரூ.3.50

648. மௌலவி என்.ஏ.அப்துல் ஹை
*சரந்தீப் கண்ட அவ்லியாச் சிறுவர் (செய்யிது சாதாத் அஷ்ஷெய்கு முஹம்மது ஸாலிஹுல் காதிரி புஹாரி ரஹ்மான் மௌலானா)*
கொழும்பு/ அல்பியன் பிரஸ்
*1976* டிசம்பர் *19*
*113*

649. ம.மு.உவைஸ்
இலங்கை முஸ்லிம்களின் பேச்சு மொழி - தமிழின் கிளை மொழி
யாழ்ப்பாணம்/ நான்காவது அனைத்துலகத் தமிழ் ஆராய்ச்சி மாநாடு
*1976*
*16,* இலவசம்

650. எஸ்.எம்.ஏ.எம்.முஸம்மில்
மவ்லித்துர் ரஸூல் (ஸல்) எழுதுவதன் நற்பயன்கள்
பெல்மதுல்ல/ பத்ரிய்யா முஸ்லிம் சங்கம்
*1976*
*28*

651. எஸ்.எம்.ஏ.ஹஸன்
கம்பன் கவியமுதம்
அக்குரணை
*1976*
20, ரூ.*1.50*

652. எஸ்.எம்.ஹனீபா
உத்தமத் தூதர்
கல்ஹின்னை/ தமிழ் மன்றம்
*1976*
51 ரூ.2/-
2ஆம் பதிப்பு *1977*
3ஆம் பதிப்பு *1983*
4ஆம் பதிப்பு *1984*

653. முஸ்லிம் சிறுமியரும் நடனமும்
மருதமுனை/ இஸ்லாமிய இளைஞர் எழுச்சி இயக்கம்
976
18

654. மேமன் கவி
யுக ராகங்கள்
கொழும்பு
1976
64, 3/-

655. எம்.பி.எம்.முஹம்மது காஸீம்
பத்வா - சுன்னத் ஜமாஅத் உலமாக்களின் மார்க்கத் தீர்ப்பு
மன்னார்/ அன்ஸாரி நூல் நிலையம்
1976
36

656. எம்.பீ.எம்.முஹம்மது காஸீம்
மாநபியே
விடத்தல்தீவு/ மன்னார் அன்ஸாரி நூல் நிலையம்
1976
24, ரூ.1.50/-

657. ஏ.எல்.எம்.சுஹைப் + எஸ்.எம்.மன்சூர்
ஜமாஅதே இஸ்லாமி - ஓர் அறிமுகம்
கொழும்பு/ இலங்கை ஜமாஅதே இஸ்லாமி
1976
82 ரூ.3.75

658. எம்.எம்.கனி
மரணமும் கடமையும்
கட்டுகஸ்தோட்டை/ பாஹிமா பப்ளிஷர்ஸ்
1976
52

659. ஷவ்கத் கமால்
அன்புக் குழந்தைகளுக்கான அழகுத் திருப்பெயர்கள்
*சின்னக்கிண்ணியா/ ரஹ்மத்துல்லாஹ் ஸ்டோர்ஸ்*
*1976*
*68,* ரூ.2.50/-

660. தொழுகை - ஷாபீஈ
*சின்னக்கிண்ணியா/ ரஹ்மத்துல்லாஹ் ஸ்டோர்ஸ்*
*1976*
*64*

661. எம்.எம்.யூசுப்
யாழ்ப்பாணம் மண்கும்பான் வெள்ளைக் கடற்கரைப் பள்ளிவாசல் தர்ஹாவும் அதன் பூர்வீக சரித்திரமும்
யாழ்ப்பாணம்/ கே.எம்.மீரான் மொஹிதீன்
*1976*
56

இத்தசாப்தத்தினுள் கிழக்கு மாகாணத்திலுள்ள கல்முனை ஸாஹிராக் கல்லூரி நூல் வெளியீட்டுத் துறையிலும், பத்திரிகை வெளியீட்டுத் துறையிலும் தீவிர அக்கறை காட்டியுள்ளது. 1950களின் ஆரம்பத்தில் அல்ஹாஜ் எம்.ஐ.எம்.மீரா லெப்பை அதிபராக இருந்த காலந் தொடக்கம் இக்கல்லூரி காலத்துக்குக் காலம் கலை, இலக்கியத் துறைகளில் தனித்துவ முத்திரைகளைப் பதித்து வந்துள்ளது. ஆரம்பக் காலத்திலேயே எம்.எஸ்.பாலு ஆசிரியரின் வழிகாட்டலில் 'உதய ஜோதி' எனும் கையெழுத்துப் பத்திரிகை நடத்தப்பட்டது. மருதூர் ஏ.மஜீத், அன்பு முகையதீன் என்போர் இதன் இணையாசிரியராவர்.

1965இல் 'மாணவ மஞ்சரி' எனும் சஞ்சிகை வெளியிடப்பட்டது. எருக்கலம் பிட்டியைச் சேர்ந்த கே.எம்.அபூபக்கர் அப்போது அதிபராயிருந்தார். பேராதனைப் பல்கலைக் கழகத்தில் பட்டம் பெற்றபின் இங்கு ஆசிரியராகக் கடமையாற்றிய எஸ்.எச்.எம்.ஜெமீலின் வழிகாட்டலில் மாணவர்

மன்றம் இதனை வெளியிட்டது. மருதூர் ஏ.மஜீத் துணையாயிருந்தார். பிற்காலத்தில் இலக்கிய உலகில் மிகப் பிரபல்யம் பெற்ற ப்ஸீல் காரியப்பர், நீலவணன், அன்பு முகையதீன் ஆகியோரின் கவிதைகளும்; அ.ஸ.அப்துஸ் ஸமது, மருதூர்க் கொத்தன் வீ.எம்.எம்.இஸ்மாயீல், எஸ்.முத்துமீரான் ஆகியோரின் சிறுகதைகளும்; எஸ்.எச்.எம்.ஜெமீல், மருதூர் ஏ.மஜீத், ஏ.யூ.எம்.ஏ.கரீம், ஏ.பீர்முஹம்மது ஆகியோரின் கட்டுரைகளும் இற்றைக்கு முப்பது வருடங்களுக்கு முன்னர் வெளிவந்த இச்சஞ்சிகையில் இடம்பெற்றிருந்தன. 112 பக்கங்களையும், 9 முழுப்பக்கப் படங்களையும் உள்ளடக்கிய இம்மலரை அச்சிடுவதற்கு ஏற்பட்ட செலவு ஒரு பிரதிக்கு ரூபாய் 1.30 மட்டுமேயாகும்.

1975இல் அல்ஹாஜ் எஸ்.எச்.எம். ஜெமீல் இக்கல்லூரியின் அதிபராக இரண்டாம் முறை பதவி ஏற்றதும் இப்பங்களிப்பு மேலும் உத்வேகம் அடைந்தது.

அக்கல்லூரியின் உயர்தர வகுப்பு மாணவர் மன்றத்தின் மாத வெளியீடாக "ஸாஹிரா" எனும் பத்திரிகை 1976 நவம்பரில் (ஹிஜ்ரி 1396 துல்கஃதா) வெளிவர ஆரம்பித்தது. அவ்வேளையில் ஆசிரியர்களாகக் கடமையாற்றிய ஏ.எம். ஹுஸைன், ஏ.எல்.எம்.ஏ. நஸீர், ஏ.கே.எம்.நியாஸ் ஆகியோருடன் மாணவர்களான யூ.எல்.எம்.அதீக், ஏ.எம்.எம். ரபீக் ஆகியோரும் இதன் வெளியீட்டில் மிகவும் அக்கறை செலுத்தினர். அதிபர் பக்கம், கவிதை உலகம், பூவையர் பூங்கா, விவாத அரங்கு, விஞ்ஞானம், கல்லூரிச் செய்திகள், உள்ளூர்த் தகவல் என்பனவற்றோடு அறிஞர்களின் கட்டுரைகளையும் மாணவர்களின் ஆக்கங்களையும் இம்மாதாந்த வெளியீடு கொண்டிருந்தது. பல வருடங்கள் மாதாந்தம் கிரமமாக வெளிவந்த இப்பத்திரிகை இன்றுவரை கடந்த 20 வருடங்கள் வெளிவந்து கொண்டிருப்பது ஒரு சாதனையாகும்.

இன்று ஆய்வு, இலக்கியம், எழுத்துத் துறைகளில் மிகப் பிரபலமாகவுள்ள பலரின் ஆக்கங்கள் இருபது வருடங்க

ளுக்கு முன்பே ஸாஹிராவில் வெளிவந்து மாணவர்களுக்கு மிகவும் பயனளித்துள்ளன. மர்ஹூம் கலாநிதி அல்ஹாஜ் ஏ.எம்.ஏ.அஸீஸ், அல்ஹாஜ் எம்.எச்.எம்.அஷ்ரஃப், கலாநிதி எம்.ஏ.நுஃமான் பேராசிரியர் ப.சந்திரசேகரம், அல்ஹாஜ் ஆ.மு.ஷரிபுத்தீன், மர்ஹூம் ஜே.எம்.எம்.அப்துல் காதர், புலவர்மணி ஏ.பெரியதம்பிப்பிள்ளை, அ.ஸ.அப்துஸ் ஸமது, மருதூர் ஏ.மஜீத், புரட்சிக்கமால், ஏ.இக்பால், சண்மு கம் சிவலிங்கம், மருதூர்க் கொத்தன் வீ.எம்.எம்.இஸ்மாயீல், எஸ்.முத்துமீரான், கலாநிதி இ.பாலசுந்தரம், எம்.ஐ.எம்.மு ஸம்மில், மு.சடாட்சரன், ஜுனைதா ஷெரீப், ஏ.யூ.எம்.ஏ.க ரீம், திக்குவல்லைக் கமால், எம்.சற்குணம், எஸ்.எச்.ஆதம் பாவா, அன்பு முகையதீன், உமா வரதராசன் என்போரின தும் வேறு பலரினதும் கட்டுரை, கவிதை, சிறுகதை என்பன ஸாஹிராவில் வெளிவந்துள்ளன. ''இன்பம் எங்கே'' எனுந் தலைப்பில் இப்பத்திரிகையில் வெளிவந்த பேரறிஞர் புலவர் மணி ஏ.பெரியதம்பிப்பிள்ளை அவர்களின் கட்டுரை அவர் இறப்பதற்கு முன் எழுதிய கடைசிக் கட்டுரை என நம்பப்படு கிறது.

இப்பத்திரிகை கல்லூரி மாணவர்களிடையே இலக்கிய ஈடுபாடு ஒன்றினை ஏற்படுத்தி ஆக்கத்திறனை வளர்க்க உதவியது. இதன் விளைவாக மாணவர்கள் தத்தம் வகுப்பு மட்டத்தில் பல கையெழுத்துப் பத்திரிகைகளையும் வெளி யிட்டனர். தென்றல், அல்லி, இளமதி, அலைகள், உதயன், தளிர், விழி என்பன அவ்வாறு வெளிவந்தன.

இதே காலப்பகுதியில் கல்முனை ஸாஹிராக் கல்லூரியின் பழைய மாணவர் சங்கம் நூல் வெளியீட்டுத் துறையில் ஈடுபட்டது. ஆண்டுக்கொரு நூலாவது வெளிவருதல் வேண் டும் எனும் அபிலாஷையில் செயற்பட்ட இப்பழைய மாண வர் சங்கம் 1976இல் இருந்து 1980ஆம் ஆண்டுக்கு இடைப் பட்ட காலத்தில் ஐந்து நூல்களை வெளியிட்டது. பழைய மாணவர் சங்கத்தின் நடவடிக்கைகளிலும், நூல் வெளியீட்டி

லும் அதன் அங்கத்தவர்களான எம்.சீ.ஆதம்பாவா, வை.எம். ஹனீபா, எஸ்.எச்.எம்.இப்ராஹீம், மர்ஹூம் எஸ்.எம்.எம். இஸ்மாயீல், மருதூர் ஏ.மஜீத், ஏ.எம்.ஹுஸைன், அன்பு முகையதீன், எம்.ஐ.அலியார் ஆகியோருடன் வேறு பலரும் தமது பங்களிப்பை நல்கினர்.

அவ்வாறு வெளிவந்த நூல்கள் வருமாறு:

662. *அன்பு முகையதீன்*
நபிகள் வாழ்வில் நடந்த கதைகள்
கல்முனை/ ஸாஹிராக் கல்லூரி பழைய மாணவர் சங்க
வெளியீடு - 1
1976 நவம்பர்
81, ரூ.3.50/-

663. எம்.ஐ.எம்.முஸம்மில்
*தியாகம்*
கல்முனை/ ஸாஹிராக் கல்லூரி பழைய மாணவர் சங்க
வெளியீடு - 2
1979 மார்ச்
51, ரூ.5/-

664. மருதூர் ஏ.மஜீத்
பன்னீர் வாசம் பரவுகிறது.
கல்முனை/ ஸாஹிராக் கல்லூரி பழைய மாணவர் சங்க
வெளியீடு - 3
1979 செப்டம்பர்
74, ரூ.5/-

665. மீ.அஹ்மத்
நோன்பின் மாண்புகள்
கல்முனை/ஸாஹிராக் கல்லூரி பழைய மாணவர் சங்க
வெளியீடு - 4
1979 ஒக்டோபர்
32, ரூ.4/-

666. எஸ்.எச்.எம்.ஜெமீல்
எ.எம்.எ.அஸீஸ் அவர்களின் கல்விச் சிந்தனைகளும், பங்களிப்பும்
கல்முனை/ ஸாஹிறாக் கல்லூரி பழைய மாணவர் சங்க வெளியீடு - 5
1980 டிசம்பர்
94, ரூ.9/-

நீண்ட இடைவெளியின் பின்னர் இச்சங்கத்தின் ஆறாவது வெளியீடாக யூ.எல்.ஆதம்பாவா அவர்களின் உருவகக் கதைகளின் தொகுதியான "நாங்கள் மனித இனம்" எனும் நூல் 1991 நவம்பரில் வெளிவந்துள்ளது. இன்றும் இப்பணி நடைபெறுகிறது.

தமிழ் நூல்களின் பட்டியல் தொடர்கிறது:

667. எம்.ஏ.நுஃமான்
தாத்தாமாரும் பேரர்களும்
கல்முனை/ வாசகர் சங்கம்
1977 மார்ச்
72, ரூ.5/-

668. அபூஹனீபா
காவியத் தலைவன் (பதியுத்தீன் மஹ்மூத்)
நிந்தவூர்/ நிந்தவூர் வட்டார ஆசிரியர் சங்கம்
1977 மே
104, ரூ.5/-

669. அ.ஸ.அப்துஸ் ஸமது
எனக்கு வயது பதின்மூன்று
அக்கரைப்பற்று/ பிறைப்பண்ணை
1977 செப்டம்பர் 3
104, ரூ.5/-

670. ஏ.எம்.அபூபக்கர்
இஸ்லாமிய வரலாறு - 1ஆம் பாகம்
சாய்ந்தமருது/ முனீரா பப்ளிகேஷன்ஸ்
1977
175 ரூ.9/-
(2ஆம் பதிப்பு: 1982 ஜூன்)

671. ஏ.எம்.அபூபக்கர்
கவிதாஞ்சலி
சாய்ந்தமருது/நூர் பிரின்டிங்
1977
76, ரூ.3/-

672. முஹம்மது ஸெயின்.
முஸ்லிம் இந்தியா
கொழும்பு/ ஸெயின்ஸ்தான் டிரேடிங் கம்பனி
1977
448.

673. முஹம்மது ஸெயின்
திருமறையில் சிறுகதைகள்
கொழும்பு/ ஸெயின்ஸ்தான் டிரேடிங் கம்பனி
1977
88

674. முஹம்மது ஸெயின்
லைலா மஜ்னு
கொழும்பு/ ஸெயின்ஸ்தான் டிரேடிங் கம்பனி
1977
88

675. முஹம்மது ஸெயின்
வெல்சுக்கோர் வெடிகுண்டு
கொழும்பு/ ஸெயின்ஸ்தான் டிரேடிங் கம்பனி
1977
60

676. மௌலவி எஸ்.எம்.முஸ்தபா மௌலானா
குகைவாசிகள்
சின்னக்கிண்ணியா/ ரஹ்மத்துல்லாஹ் ஸ்டோர்ஸ்
1977
72, ரூ.10/-
(2ஆம் பதிப்பு: 1985)

677. பெரிய மரணவிளக்கம் மனதைத் துலக்கும்
சின்னக்கிண்ணியா/ ரஹ்மத்துல்லாஹ் ஸ்டோர்ஸ்
1977
32

678. பெண் புத்திமாலை
சின்னக்கிண்ணியா/ ரஹ்மத்துல்லாஹ் ஸ்டோர்ஸ்
1977
16, ரூ.1.25

679. பதுருத்தீன் புலவர்
முகையதீன் புராணம் - ஹஜ்ஜுக்குப் போன படலம்
கொழும்பு/ செட்டியார் தெரு மீலாத் இயக்கம்
1977
66

680. எம்.டீ.எம்.நவாஸ்
இஸ்லாமியப் பாடல்கள்
கொழும்பு
1977
40, ரூ.1.25

681. ஏ.ஆர்.எம்.முபாரக்
இஸ்லாம் காட்டும் வாழ்க்கை நெறி
குவைத்/ இப்சோ
1977

682. எம்.எம்.இக்பால்
ஒரு கருவண்டு பறக்கிறது
விடத்தல்தீவு/ அன்ஸாரி நூலகம்
1977
79, ரூ.3/-

683. ம.மு.உவைஸ்
காயல்பட்டணம் வளர்த்த தீன்தமிழும் தீந்தமிழும்
பாணந்துறை
1978 ஜனவரி 13
34

684. ம.மு.உவைஸ்
புலவரும் புரவலரும்
பாணந்துறை
1978 ஜனவரி 15
35

685. மௌலவி எம்.ஜே.எம்.ரியாழ்
காதியானிகள் முஸ்லிம்களா?
நீர்கொழும்பு/ பெரியமுல்லை ஜும்ஆப்பள்ளி
காதியானி எதிர்ப்பு மகாநாட்டுக் குழு
1978 ஏப்ரல் 22
20, இலவசம்

686. ஏ.யூ.எம்.ஏ.கரீம்
நபிகள் பெருமானார்
சாய்ந்தமருது/ இஸ்லாமிய இலக்கியப் பணிமனை
1978 ஓகஸ்ட்
108 ரூ.5.50

687. புலவர்மணி ஆ.மு.ஷரீபுத்தீன்
தமிழ் இலக்கியம் - ஆ.பாடத்திட்டம்
கண்டி/ கலைவாணி புத்தக நிலையம்
1978
155, ரூ.4.50

688. எம்.பி.முஹம்மது ஜலீல்
ஒரு வெள்ளைப் பூ சிரிக்கிறது
சம்மாந்துறை/மலர் வெளியீடு
1978
220, ரூ.10/-

689. எம்.வை.எம்.முஸ்லிம்
இறவாச் செல்வம்
கட்டுகஸ்தோட்டை/ இஸ்லாமிய சேமநலச் சங்கம்
1978
48 ரூ.3.50

690. மருதூர்வாணர்
சூறாவளி (குறுநாவல்)
கல்முனை/ முத்தமிழ் கழகம்
1978
48 ரூ.3/-

691. ஏ.ஜே.எம்.இஸ்மாயீல்
உம்மத்துன்நபி
கஹவத்த
1978
34

692. ஏ.ஆர்.எம்.சலீம்
புயல் செய்த பேரழிவு
அக்கரைப்பற்று
1978
12, ரூ.6/-

693. எஸ்.ஆதம்பாவா
சூறாவளி பெரும் புயற் காவியம்
காத்தான்குடி
1979
5

694. உ.லெ.அப்துல் மஜீது
பெரும் புயற் காவியம்
மருதமுனை
1979
12

695. எஸ்.எம்.மன்சூர்
ஈரான் மக்கள் புரட்சி
மாத்தளை/ பைத்துல் ஹிக்மா வெளியீட்டுப் பணியகம்
1979 பெப்ரவரி 15
47, ரூ.2.25

696. ஏ.எல்.அப்துல் மஜீத் எம்.பி.
சிறப்பான வரலாறு கண்ட இலங்கை முஸ்லிம்கள்
கிண்ணியா/ முற்போக்கு வாலிபர் மன்றம்
1979 மார்ச்
17

697. எம்.ஏ.நுஃமான் + சி.மௌனகுரு + மௌ.சித்திரலேகா
20ஆம் நூற்றாண்டு ஈழத்துத் தமிழ் இலக்கியம்
கல்முனை/ வாசகர் சங்கம்
1979 மார்ச்
114, ரூ.5.50

698. நவநூர் (எம்.எம்.நூர் முஹம்மத்)
பருவம் பனிரெண்டு
காத்தான்குடி/ கவிஞர் ஒன்றியம்
1979 ஜூன்
32, ரூ.2/-

699. உஸ்மான் ஸாஹிப்
கலங்கிய உள்ளங்களுக்குத் தெளிவு தரும் மாமருந்து
கல்முனை/ இலங்கை ஜமாஅதே இஸ்லாமி
கல்முனைக் கிளை
1979 ஜூன் 30
20, இலவசம்

700. எம்.எஸ்.அப்துல் ரஹீம்
யாழ்ப்பாண முஸ்லிம்கள் - வரலாறும் பண்பாடும்
யாழ்ப்பாணம்/ இஸ்லாமிய இலக்கியக் கழகம்
1979 டிசம்பர்
283, ரூ.10/-

701. வித்துவான் எம்.ஏ.ரஹ்மான்
இளமையில் இஸ்லாமியப் பெரியார்கள்
சென்னை
1979

702. புண்ணியாமீன்
தேவைகள்
உடத்தலவின்னை மடிகே
1979
66, ரூ.3.90

703. ஏ.எம்.அபூபக்கர்
இஸ்லாமிய வரலாறு - 2ஆம் பாகம்
சாய்ந்த மருது/ முனீரா பதிப்பகம்
1979.
176, ரூ.10/-

704. அல்லாப்பிச்சைப் புலவர்
சலவாத்துப் பாட்டு
*சின்னக்கிண்ணியா/ ரஹ்மத்துல்லாஹ் ஸ்டோர்ஸ்*
1979
23

705. கே.எம்.ஷாகுல் ஹமீத்
பத்து சூறாக்களின் பாயிதா
கொழும்பு/ டயமன் அச்சகம்
1979
16

706. புலவர்மணி ஆ.மு.ஷரிபுத்தீன்
புதுக்குஷ்ஷாம் - பாருக்கியாக் காண்ட வசனம்
கொழும்பு/ கல்வி வெளியீட்டுத் திணைக்களம்
1979
222, இலவசம்

1979இல் நடைபெற்ற முக்கிய நிகழ்வு உலக இஸ்லாமியத் தமிழ் இலக்கிய ஆராய்ச்சி நான்காவது மகாநாடு கொழும்பில் நடைபெற்றதாகும்.

சென்னையில் நடைபெற்ற இரண்டாவது உலக இஸ்லாமியத் தமிழ் இலக்கிய ஆராய்ச்சி மகாநாட்டின் இறுதியில் நிகழ்ந்த பிரியாவிடை தேநீர் விருந்தில் வலியுறுத்தப்பட்டது போல நான்காவது மகாநாட்டை இலங்கையில் நடத்துவதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டன. முதல் மூன்று மகாநாடுகளிலும் கலந்து கொண்ட பேராசிரியர் எம்.எம். உவைஸ் அவர்கள் தலைமையில் மகாநாட்டுக்குழு ஒன்று தெரிவு செய்யப்பட்டு இயங்கியது.

இத்தகைய பாரிய மகாநாடு ஒன்றுக்கு ஏற்படும் இலட்சக்கணக்கான ரூபாய் பணத்தினைத் திரட்டுவது தொடர்பாகப் பல ஆலோசனைகள் முன் வைக்கப்பட்டன. பொதுமக்களிடம் இதற்கான நிதியைச் சேகரிப்பதெனத் தீர்மானிக்கப்பட்டது. பேராசிரியர் உவைஸ் அவர்கள் தனிப்பட்ட முறையில் ஒரு சில கொடைவள்ளல்களைச் சந்திக்கும் வாய்ப்பு ஏற்படும் பொழுது மகாநாட்டுக்கான நிதி திரட்டும் உத்தேசம் பற்றிப் பிரஸ்தாபித்துள்ளார். ஆனால் அத்தகையோரின் பதில் அவ்வளவு திருப்திகரமான ஒன்றாக அவருக்குப் புலப்படவில்லை. இதனால் மனத்தளர்ச்சிக்குள்ளான அவர் தமது நெருங்கிய உறவினர்களுடன் தொடர்பு கொண்டார். மகாநாடு பற்றியும் அதனை நடத்துவதற்காகப் பணம் சேர்க்கும் முயற்சியில் ஈடுபட வேண்டும் என்றும் அமைப்புக்குழுக் கூட்டத் தீர்மானம் பற்றியும் வசதி படைத்த உறவினர்களுடன் மனம்விட்டுப் பேசினார். "எவராவது மனமுவந்து

தந்தால் பெற்றுக் கொள்ளுங்கள். யாரிடமாவது பணம் கேட்டுப் போக வேண்டாம்'' என் அவருடைய உறவினர் அவரைப் பணித்தனர். ''தேவையாகும் பணத்தை நாங்களே தருகிறோம்'' எனவும் கூறினர். அவர் தம் உறவினர், தாம் கூறிய வாக்குறுதியை நிறைவேற்றினர். தேவைப்படும் போதெல்லாம் பணம் கொடுத்து உதவினர். கொழும்பு பல்லாக்குலெவ்வை நிறுவனத்தைச் சேர்ந்த பீ.ஏ.சதக் அவர்கள் நூல்களை வெளியிடும் பொறுப்பையேற்றுக் கடமையாற்றினார். சிங்கப்பூரிலிருந்து அல்ஹாஜ் எம்.அப்துல் கரீம் என்பவரும் பொருளுதவி செய்தார். உவைஸ் அவர்களது குடும்பத்தினரின் இத்தாராள மனப்பான்மையினால் நான்காவது உலக இஸ்லாமியத் தமிழ் இலக்கிய மகாநாடு கொழும்பில் பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மகாநாட்டு மண்டபத்தில் எவ்வித நிதித் தடங்கலுமின்றி மிகச் சிறப்பாக நடைபெற்றது.

தமிழ்நாட்டுப் பேராளர்களின் வசதியை முன்னிட்டு மகாநாட்டை 1979 மே மாதம் இறுதியில் நடத்தலாம் என முதலில் தீர்மானிக்கப்பட்டது. அங்குள்ள கல்லூரிகள் விடுமுறைக்காக மே மாதம் மூடப்பட்டிருக்குமாதலால் பேராசிரியர்கள் இங்கு வந்து மகாநாட்டில் பங்கு பற்றுவது எளிதாக இருக்கும் என்பதனாலும் அக்கால எல்லை நிர்ணயிக்கப்பட்டது. எனினும் மகாநாடு பின்னர் 1979ஆம் ஆண்டு ஜூன் மாதம் 29ஆம் திகதியும் 30ஆம் திகதியும் ஜூலை மாதம் 1ஆம் திகதியும் வெள்ளி, சனி, ஞாயிறு ஆகிய தினங்களில் நடைபெற்றது. இதனால் ஏற்கனவே மகாநாட்டுக்கு வந்து கலந்து கொள்வதற்காகத் திட்டமிட்டிருந்த பல தென்னிந்தியப் பிரமுகர்கள் வரமுடியாது போயிற்று.

தமிழ் நாட்டிலிருந்து அப்போதைய கிராம அபிவிருத்தி, வக்பு அமைச்சர் ராஜா முஹம்மது, கல்வியமைச்சர் சீ.அரங்கநாயகம், நீதியரசர் மு.மு.இஸ்மாயீல், ஆ.கா.அப்துஸ்ஸமத், மௌலானா மௌலவி மு.அப்துல் வஹாப், எம்.சையத் முஹம்மது (ஹஸன்), உலகத் தமிழ் ஆராய்ச்சி நிறுவனத்

தைச் சேர்ந்த டாக்டர் ச.வே.சுப்ரமணியன், டாக்டர் ஏ.எம். பெருமாள், செந்தாமரை கே.பீ.எஸ்.ஹமீத் என்போருடன் வேறு பலரும் வந்திருந்தனர். ஹொங்கொங்கிலிருந்து வந்த அல்ஹாஜ் எஸ்.எம்.யூனூஸ் மகாநாட்டில் பங்கேற்றார்.

மகாநாட்டின் முதல்நாள் நிகழ்ச்சிகளை அப்போதைய ஜனாதிபதி மேதகு ஜே.ஆர்.ஜயவர்தன அவர்கள் தொடங்கி வைத்தார். இறையருள் இசைமுரசு ஈ.எம்.ஹனீபா அவர்களின் கிராஅத்துடனும் இறைவாழ்த்துடனும் விழா ஆரம்பமாகியது.

அன்று மாலை நடைபெற்ற நூல் வெளியீட்டு விழாவில் பின்வரும் நூல்கள் வெளியிடப்பட்டன:

1. பிறைக்கொழுந்து (மகாநாட்டுச் சிறப்பு மலர்)
2. பிறைப்பூக்கள் (ஈழத்து இஸ்லாமியச் சிறுகதைத் தொகுதி)
3. பிறைத்தேன் (ஈழத்து இஸ்லாமியக் கவிதைத் தொகுப்பு)
4. புதுக்குஷ்ஷாம்-உரைகள்

இவை மகாநாட்டுச் செலவில் வெளியிடப்பட்டன. அங்கு வெளியிடப்பட்ட ஏனைய நூல்களாவன:

5. இசைவருள் மாலையும் மக்களுக்கு இதோபதேசமும்
6. ஆயிஷா நாச்சியார் பிள்ளைத் தமிழ்
7. சின்ன சீறா
8. தமிழக இஸ்லாமிய சிறுகதைத் தொகுதி
9. சென்னை பல்கலைக்கழகத் தத்துவத்துறை ஆராய்ச்சிக் கட்டுரைத் தொகுப்பு
10. இலங்கை முஸ்லிம்களின் திருமணச் சம்பிரதாயங்கள்
11. பர்பரீன்

12. யசஹாமி (சிறுவர் ஆண்டுக்கான சிறுவர் நூல்)

13. புதுக்குஷ்ஷாமில் இடம்பெற்றுள்ள அறபுச் சொற்கள்.

14. இஸ்லாமியத் தமிழ் இலக்கியம் - இலங்கை நூல்களின் தேர்ந்த பட்டியல்

ஜூன் 30ஆம் திகதி சனிக்கிழமை கருத்தரங்குகள் நடைபெற்றன. அன்று காலையில் இரண்டும் மாலையில் இரண்டுமாக நான்கு கருத்தரங்குகள் நடைபெற்றன. "இஸ்லாமியத் தமிழ் இலக்கியம் - 1" எனும் தலையங்கத்தில் முதலாவது கருத்தரங்கு நடைபெற்றது. சீறாப்புராணம் பற்றியதாக இது அமைந்திருந்தது.

இரண்டாவது கருத்தரங்கு புதுக்குஷ்ஷாம் பற்றியதாக அமைந்திருந்தது. காப்பிய அமைப்பு, இயற்கை வர்ணனை, பாத்திரப் படைப்பு, சொல்லாட்சி, இஸ்லாமியக் கோட்பாடுகளும் அரபுச் சொற்களும் எனும் தலைப்புகளில் சேகுநாப்புலவரின் புதுக்குஷ்ஷாம் எனும் காப்பியம் ஆராயப்பட்டது.

கருத்தரங்கின் மூன்றாவது அமர்வு, அறபுத் தமிழ் பற்றியதாக இருந்தது. அறபுத் தமிழின் தோற்றம், வளர்ச்சி, செல்வாக்கு, யாப்பமைதி, அறபுத் தமிழ்த் தொண்டு பற்றிய பல்வேறு அம்சங்களைக் கொண்ட ஒன்பது கட்டுரைகள் படிக்கப் பெற்றன.

நான்காவது அமர்வில் 25 கட்டுரைகள் அரங்கேற்றப்பட்டன. ஒரு தமிழனின் பார்வையில் ஈழத்து முஸ்லிம் எழுத்தாளரின் பணி, கிழக்கிலங்கை முஸ்லிம்களிடையே வழக்கிலுள்ள சடங்குகளும் மரபுகளும், முஸ்லிம் நாட்டுப் பாடல்களின் மொழியமைப்பு, எழுநூறு ஆண்டுகளுக்கு முற்பட்ட இஸ்லாமிய இலக்கியம், முஸ்லிம் எழுத்தாளர் படைத்த நாடகங்கள் என்பன அவற்றுட் சிலவாகும்.

மூன்றாம் நாள் காலை கவியரங்கு நடைபெற்றது. வள்ளல் நபியின் வழிகாட்டும் வாழ்வு எனும் தலைப்பில் 10 கவிஞர்கள் பிறப்பு, வளர்ப்பு, நபிப்பட்டம், மக்காவில்

போதனை, ஹிஜ்ரத், மதீனா வாழ்க்கை, புனிதப்போர், மக்கா வெற்றி, ஹஜ்ஜதுல் விதாஉ, வபாத்து எனும் 10உப தலைப்புக்களில் பெருமானாரின் புகழ் பாடினர்.

அன்று மாலை பாராட்டு விழா நடைபெற்றது. அன்றைய பிரதமர் மாண்புமிகு ரணசிங்க பிரேமதாச அவர்கள் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டார். பலருக்குப் பொன்னாடை போர்த்தியும் பொற்கிழி வழங்கியும் கௌரவம் வழங்கப்பட்டது.

விழா முடிவில் நாகூர் ஈ.எம்.ஹனிபா, காயல் ஷேக் முஹம்மத், ஹுஸைன் பாகவதர் ஆகியோரின் இன்னிசை நிகழ்ச்சிகள் இடம்பெற்றன[2].

இம்மகாநாட்டில் வெளியிடப்பட்ட இலங்கையரின் நூல் விபரம் வருமாறு:

707. ம.மு.உவைஸ்
பிறைக்கொழுந்து (உரைநடைத் தொகுப்பு)
கொழும்பு/நான்காவது அகில உலக இஸ்லாமியத் தமிழ் இலக்கிய மகாநாடு
1979 ஜூன்
232, இலவசம்

708. அ.ஸ.அப்துஸ் ஸமது
பிறைப்பூக்கள் (சிறுகதைத் தொகுப்பு)
கொழும்பு/ நான்காவது அகில உலக இஸ்லாமியத் தமிழ் இலக்கிய மகாநாடு
1979 ஜூன்
185, ரூ.15/-

---

2. அல்ஹாஜ் கலாநிதி ம.மு.உவைஸ் - மருதை முதல் வகுதை வரை, டிசம்பர் 1990 - பக்: 38 - 54

709. எம்.சி.எம்.ஸுபைர்
பிறைத்தேன் (கவிதைத் தொகுப்பு)
கொழும்பு/ நான்காவது அகில உலக இஸ்லாமியத் தமிழ் இலக்கிய மகாநாடு
1979 ஜூன்
96, ரூ.17/-

710. புலவர்மணி ஆ.மு.ஷரிபுத்தீன்
புதுக்குஷ்ஷாம் - பாருக்கியாக் காண்டம் - பாகம் 1 - உரை
மூலம்: சேகுநாப்புலவர்
கொழும்பு/ நான்காவது அகில உலக இஸ்லாமியத் தமிழ் இலக்கிய மகாநாடு
1979 ஜூன்
468, ரூ.57.50

711. புலவர்மணி ஆ.மு.ஷரிபுத்தீன்
புதுக்குஷ்ஷாம் - பாருக்கியாக் காண்டம் - பாகம் 2
மூலம்: சேகுநாப்புலவர்
கொழும்பு/ நான்காவது அகில உலக இஸ்லாமியத் தமிழ் இலக்கிய மகாநாடு
1979 ஜூன்
490.

712. புலவர்மணி ஆ.மு.ஷரிபுத்தீன்
புதுக்குஷ்ஷாம் - பாருக்கியாக் காண்டம் - பாகம் 3
மூலம்: சேகுநாப்புலவர்
கொழும்பு/நான்காவது அகில உலக இஸ்லாமியத் தமிழ் இலக்கிய மகாநாடு
1979 ஜூன்
360

713. ம.மு.உவைஸ்
புதுகுஷ்ஷாம் - பாரூக்கியாக் காண்டம் - 4ஆம் பாகம்
மூலம்: சேகுனாப் புலவர்
கொழும்பு/ நான்காவது அகில உலக இஸ்லாமியத் தமிழிலக்கிய மகாநாடு
1979 ஜூன்
369, ரூ.67.50

714. ஜே.எம்.எம்.அப்துல்காதிர்
புதுகுஷ்ஷாம் - காண்டம் சித்திக்கிய்யா - பாகம் 1
மூலம்: சேகுனாப்புலவர்
கொழும்பு/ நான்காவது அகில உலக இஸ்லாமியத் தமிழிலக்கிய மகாநாடு
1979 ஜூன்
228

715. ஜே.எம்.எம்.அப்துல்காதிர்
புதுகுஷ்ஷாம் - காண்டம் முஹம்மதிய்யா
மூலம்: சேகுனாப்புலவர்
கொழும்பு/ நான்காவது அகில உலக இஸ்லாமியத் தமிழிலக்கிய மகாநாடு
1979 ஜூன்
308, 36/-

716. எம்.எம்.உவைஸ்
புதுக்குஷ்ஷாமில் இடம்பெற்றுள்ள அறபுச் சொற்கள்
கொழும்பு/ நான்காவது அகில உலக இஸ்லாமியத் தமிழ் இலக்கிய மகாநாடு
1979 ஜூன்
20, இலவசம்

717. புலவர்மணி ஆ.மு.ஷரிபுத்தீன்
இசைவருள் மாலையும் மக்களுக்கு இதோபதேசமும்
மருதமுனை/ ஏ.ஜே.ஷரிபுத்தீன்
1979 ஜூன்
56, ரூ.7/-

718. எஸ்.எம்.கமாலுத்தீன்
பார்பரீன்
கொழும்பு/ அகில இலங்கை முஸ்லிம் வாலிபர் சங்கப் பேரவை
1979 ஜூன்
71

719. எஸ்.எம்.கமாலுத்தீன்
இஸ்லாமியத் தமிழ் இலக்கியம் - இலங்கை நூல்களின் தேர்ந்த பட்டியல்
பேருவளை/ நளீமிய்யா இஸ்லாமிய நூலகம்
1979 ஜூன்
10

720. ஏ.எம்.சமீம்
இலங்கை முஸ்லிம்களின் திருமணச் சம்பிரதாயங்கள்
கொழும்பு/ நான்காவது அகில உலக இஸ்லாமியத் தமிழ் இலக்கிய மகாநாடு
1979 ஜூன்
62

721. எஸ்.எம்.ஏ.ஹஸன்
யசஹாமி
கொழும்பு/மெய்கண்டான் வெளியீடு
1979 ஜூன்
37, ரூ.3.75

இத்தகைய சிறப்பான மகாநாட்டை முன்னின்று நடத்தியவர் **பேராசிரியர் ம.மு.உவைஸ்** ஆவார்.

1945ஆம் ஆண்டு நடைபெற்ற பல்கலைக்கழகப் புகுமுகத் தேர்வின் நேர்முகப் பரீட்சைக்கு ம.மு.உவைஸ் சென்றார். சுவாமி விபுலானந்தர் பரீட்சைக் குழுவின் ஓர் உறுப்பினராக இருந்தார். இஸ்லாமிய அடிப்படையில் எழுந்த காப்பி

யம் எதனையும் பற்றித் தெரியுமா என உவைஸிடம் கேட்டார் சுவாமி. உவைஸுக்குத் தெரியவில்லை. சீறாப்புராணத்தைப் பற்றித் தெரியுமா என மீண்டும் சுவாமி கேட்டார். பெயரைக் கேள்விப்பட்டிருப்பதாக உவைஸ் பதிலளித்தார். இச்சம்பவம் அவரது மனதிலே தாக்கத்தை ஏற்படுத்தியிருத்தல் வேண்டும்.

அதனாற்றான் அரை நூற்றாண்டுக்கு முன்னர் இஸ்லாமிய இலக்கியம் பற்றி எதனையுமே அறிந்திராத உவைஸ், இன்று ஈராயிரத்துக்கும் மேற்பட்ட அவ்வகை ஆக்கங்களை பற்றிய தகவல்களை வெளிக்கொணர்ந்திருக்கிறார். இது வோர் பாரிய சாதனையே!

"ஊர்மனை" என ஒரு காலத்தில் வழங்கப்பட்ட பாணந்துறை, ஹேனமுல்லையில் 1922 ஜனவரி 15இல் மஃமூத் லெப்பை, செய்னம்பு நாச்சியார் தம்பதிகளின் ஒரே பிள்ளையாகப் பிறந்த உவைஸ், தனது ஆரம்பக் கல்வியை அவ்வூர் அரசினர் முஸ்லிம் தமிழ் பாடசாலையிற் பெற்றார். பேராசிரியர் கார்த்திகேசு சிவத்தம்பியின் தந்தையார் எஸ்.கார்த்திகேசுவே அப்பாடசாலையின் தலைமை ஆசிரியர். தனது ஆங்கிலக் கல்வியை தக்ஸலா வித்தியாலய, பாணந்துறை சென். ஜோன்ஸ் என்பனவற்றிற் கற்று பல்கலைக் கழகம் சென்றார். இலங்கையில் அப்போது ஒரேயொரு பல்கலைக் கழகம் கொழும்பில் மட்டுமே இருந்தது.

பிற்காலத்தில் தமிழிலும், இஸ்லாமியத் தமிழிலக்கியத்திலும் நிபுணத்துவம் அடைந்த உவைஸ், பல்கலைக்கழகம் செல்லும் வரை தமிழ்ப் பாடத்தைத் தானாகவே கற்றார். அவர் படித்த பாடசாலைகள் எதனிலும் அப்பாடம் கற்பிக்கப்படாமையே அதற்குரிய காரணமாகும். அதனால் சிங்களத்தைப் பாடசாலையிலும், தமிழைத் தானாகவும் கற்றே அவர் தேறினார். பள்ளிப் பருவத்திலேயே அறபு, ஆங்கிலம் என்பனவற்றையும் கற்றுப் பல்கலைக்கழகம் செல்லும்

பொழுது அறபு, தமிழ், சிங்களம், ஆங்கிலம், பாளி எனும் மொழிகளில் நன்கு பரிச்சயமுடையவராயிருந்தார். இதுவோர் அபூர்வ திறமையாகும்.

இவரது பல்கலைக் கழகக் கல்வியில் இரு தனித்துவங் களை அவதானிக்கலாம். பல்கலைக்கழக மட்டத்தில் தமி ழைக் கற்பது தரக்குறைவானது எனக் கருதப்பட்ட காலத் திலே அப்பாடத்தையே இவர் தனது சிறப்புப் பாடமாகத் தேர்ந்தெடுத்தார். இவர் மட்டுமே அவ்வகுப்பில் மாணவன். அடுத்தது, சிங்களத்தை உபபாடமாகக் கொண்டமையாகும்.

1949இல் தமிழில் சிறப்புப் பட்டம் பெற்ற உவைஸ், தொடர்ந்து முதுமாணிப்பட்டம் பெறுவதற்கான ஆய்வில் ஈடுபட்டு .'முஸ்லிம்கள் தமிழுக்காற்றிய தொண்டு' எனும் ஆய்வு நூலுக்கு 1951 இலேயே அப்பட்டத்தினைப் பெற் றார். சுவாமி விபுலானந்தர், பேராசிரியர் க.கணபதிப்பிள்ளை; பேராசிரியர் சு.வித்தியானந்தன்; கலாநிதி எ.எம்.எ.அஸீஸ் ஆகியோரே இவர் ஆய்வுகள் மேற்கொள்ள ஊக்கமளித் தோர் ஆவர். இந்தியா வரை சென்று ஆய்வுகள் மேற் கொள்ள நிதிவசதிகளை எ.எம்.எ.அஸீஸே முஸ்லிம் கல்விச் சகாய நிதிமூலம் செய்து கொடுத்தார். பின்னர் கலாநிதிப் பட்டத்தையும் உவைஸ் பெற்றார்.

'முஸ்லிம்கள் தமிழுக்காற்றிய தொண்டு' எனும் நூலில் 200 இஸ்லாமிய இலக்கிய ஆக்கங்களைப் பற்றிக் குறிப்பிட் டுள்ளார். பிற்காலத்தில் 1979இல் மதுரை காமராசர் பல்கலைக் கழக இஸ்லாமியத் தமிழிலக்கியத்துறை இருக்கைத் தலைவ ராக நியமிக்கப்பட்ட பின்னர் மேற்கொண்ட ஆய்வுகளின் விளைவாக 2000க்கு மேற்பட்ட அத்தகைய இலக்கியப் படைப்புக்களைப் பற்றிய விபரங்களை வெளிக்கொணர்ந் துள்ளார். தமிழில் மட்டுமல்ல, தமிழ் இலக்கியத்தில் மட்டு மல்ல - உலகப் பரப்பிலேயே இதுவொரு சாதனையாகும். சுவாமி விபுலாநந்தருக்குப் பின்னர் இலங்கையிலிருந்து இந்தி

யப் பல்கலைக் கழகம் ஒன்றுக்குப் பேராசிரியராகச் சென்ற ஒரேயொருவரான உவைஸ் அப்பதவிக்குத் தான் தகுதியே யென நிரூபித்துள்ளார். இலங்கை வித்தியோதயப் பல்கலைக்கழகத்திலும் கீழைத்தேய மொழிகள் துறையின் தலைவராக அதற்கு முன்னதாகக் கடமையாற்றியதுமுண்டு.

திருச்சி, சென்னை, காயல்பட்டணம், கொழும்பு, கீழக்கரை எனுமிடங்களில் நடைபெற்ற இஸ்லாமியத் தமிழிலக்கிய மகாநாடுகள் அனைத்திலும் பங்கு பற்றியுள்ளார்.

பேராசிரியர் எழுதி வெளியிட்ட நூல்கள் 45; மொழி பெயர்ப்புக்கள் 12; பதிப்பித்தவை 14; உரைநூல்கள் 3; ஆங்கில மொழி நூல்கள் 4; ஆக மொத்தம் 78.

தீன்தமிழ் காவலர்; இலக்கியச் சித்தர்; பண்டிதரத்ன; கலைமாமணி; இலக்கியச் செம்மல் என்றெல்லாம் பட்டம் வழங்கிக் கௌரவிக்கப்பட்ட உவைஸுக்கு 1992 தேசிய வீரர் தினத்தன்று இந்நாட்டு அரசாங்கம் 'கலாசூரி'ப் பட்டம் வழங்கிக் கௌரவித்தது. 1994இல் முஸ்லிம் சமய, பண்பாட்டலுவல்கள் ராஜாங்க அமைச்சு 'அல்லாமா' பட்டமளித்தது. இலங்கையில் அல்லாமா கௌரவம் அளிக்கப்பட்ட ஒரேயொரு முஸ்லிம் இவரேயாவார்.

இம்மகாநாட்டில் அதிகளவு நூல்களை வெளியிட்ட **புலவர் மணி அல்-ஹாஜ் ஆ.மு.ஷரிபுத்தீன்** அவர்கள் கிழக்கிலங்கையிலுள்ள மருதமுனை என்னும் ஊரில் 1909ஆம் ஆண்டு மே மாதம் 4ஆம் திகதி பிறந்தார். ஆதம்பாவா மரைக்காயர், பாத்திமா தம்பதிகளின் மூத்த மகனான இவருக்கு இரு சகோதரர்களும், ஆறு சகோதரிகளும் உடன்பிறப்புகளாக அமைந்தனர். புலவர்மணி தமது ஆரம்பக் கல்வி முதல் மாணவ ஆசிரிய இறுதி வகுப்பு வரை மருதமுனை அரசினர் ஆண்கள் பாடசாலையில் (தற்போதைய மருதமுனை அல் மனார் தேசியப் பாடசாலை) கல்வி கற்றார். யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த ஜே.எஸ்.வேலுப்பிள்ளையிட

மும், மட்டக்களப்பு காரைதீவைச் சேர்ந்த கே.எஸ்.வைரமுத்துவிடம் முறையாக தமிழ் இலக்கண, இலக்கியங்களைக் கற்றுத் தேர்ந்தார். பிற்காலத்தில் சிறிது காலம் தவத்திரு விபுலானந்த அடிகளிடமும் இலக்கண, இலக்கிய, சமஸ்கிருத பாடங்களைக் கற்கும் பாக்கியம் பெற்றார்.

கிழக்கிலங்கையின் முதல் முஸ்லிம் ஆசிரியரான புலவர்மணி அவர்கள் 1924ஆம் ஆண்டு தமது 15வது வயதில் மாணவ ஆசிரியராகத் தாம் கற்ற பாடசாலையிலேயே பதவியேற்று 3 வருடங்கள் சேவை செய்தார். பின்னர் ஆசிரிய தராதரப் பத்திர இரண்டாம், முதலாம் தரங்களில் முறையே தேர்ச்சி பெற்று 1927ஆம் ஆண்டு தொடக்கம் 15 ஆண்டுகள் உதவி ஆசிரியராகப் பதவி வகித்தார். 1942இல் கண்டி மாவட்ட உடதலவின்னை மடிகே அரசினர் முஸ்லிம் பாடசாலையில் தலைமை ஆசிரியராக மாற்றம் பெற்று அதிபர் நிலையில் தமது சேவையைத் தொடங்கினார். பின்னர் அக்கரைப்பற்று முஸ்லிம் ஆண்கள் பாடசாலையிலும், மருதமுனை அரசினர் ஆண்கள் பாடசாலையிலும் தலைமையாசிரியராகப் பணியாற்றினார்.

1950-51 காலப் பகுதியில் தமது 41வது வயதில் அட்டாளைச்சேனை ஆசிரியப் பயிற்சி கலாசாலையில் பயிற்சி பெற்றார். 19 வருட காலம் தலைமையாசிரியராகப் பணியாற்றிய பின்னர் 1961ஆம் ஆண்டு கல்வியதிகாரியாகப் பதவியுயர்வு பெற்றார்.

தமது தாய்மாமன் மகள் முஹம்மது ஆய்ஷாவை திருமணம் செய்த புலவர்மணி அவர்களுக்கு எட்டு ஆண் குழந்தைகளும் ஒன்பது பெண் மக்களும் பிறந்தனர்.

பல பொதுப் பணிகளில் ஈடுபட்ட புலவர் மணியவர்கள் தனது பாட்டனார் சின்னாலிமப்பா என அழைக்கப்பட்ட மீராலெப்பை ஆலிமின் 'ஞானரை வென்றான்' எனும் கவிதையேட்டுப் பிரதியை அச்சுவாகனம் ஏற்றினார். 1952இல்

க.பொ.த்.(சாதாரண தர) இலக்கிய பாடத்திற்காக 'சீறாப்புரா ணம் பதுறு படலத்திற்கு உரையெழுதினார். 1967இல் 'நபி மொழி நாற்பது' எனும் நூலை யாத்து இலங்கை சாகித்திய மண்டலப் பரிசும் பெற்றார். இக்காலப் பகுதியில் 'வீராங் கனை சைதா' என்னும் இவரது கவிதை நூலும் வெளியா னது. 1979இல் புதுக்குஷ்ஷாம் காப்பியத்திற்கு உரையெழுதி னார். இது நான்கு 'வால்யூம்'களாக நான்காவது உலக இஸ்லாமியத் தமிழாராய்ச்சி மகாநாட்டில் வெளியிடப்பட் டது. 1979இல் புதுக்குஷ்ஷாம் வசன நூல் ஒன்றினை ஆக்கி க.பொ.த. (சாதாரணதர) வகுப்பிற்குப் பாடநூலாக வழங்கி னார். இஸ்லாமியத் தமிழாராய்ச்சி மகாநாட்டில் 'இசைவருள் மாலையும் மக்களுக்கு இதோபதேசமும்' என்னும் கவிதை நூலும் அரங்கேற்றம் பெற்றது. 1984இல் 'கனிந்த காதல்' என்னும் கிராமிய இலக்கிய நூல் வெளிவந்தது. இவ்வாறு புலவர்மணியின் பல நூல்கள் வெளிவந்த போதும் அவரது ஏராளமான ஆக்கங்கள் இன்னும் அச்சுவாகனம் ஏறாது முடங்கிக் கிடக்கின்றன.

1953இல் 'ஆசிரியமணி' பட்டம் இவருக்கு வழங்கப்பட் டது. 1969இல் இலங்கை அரசினர் சாகித்திய விழாவில் தமிழ் மேதை சோ.நடராசா அவர்களால் 'புலவர்' என வாழ்த்தப் பட்டு மட்டக்களப்பு தமிழ்ச் சங்கம் வரவேற்பளித்து அதன் உபதலைவர்களின் ஒருவராகவும் ஏற்றுக்கொண்டது. 1972இல் கரைவாகு வடக்கு இணக்க சபையின் தலைவராக நியமனம் பெற்றார். 1976இல் புலவர்மணி ஏ.பெரிய தம்பிப் பிள்ளை அவர்களால் 'வெண்பாவில் என்னை நீ வென்றாய் ஷரிபுத்தீன் நண்பா! என் நாமம் உனக்களித்தேன்' என வாழ்த்தி தமது நாவால் புலவர்மணி என மகிழ்வுடன் அழைத் தார். 1979இல் அனைத்துலக இஸ்லாமியத் தமிழாராய்ச்சி மகாநாட்டில் தமிழறிஞர் அ.க.அப்துஸ் ஸமத் அவர்கள் 'வெண்பாப்புலி' என நாமம் இட்டுக் கௌரவித்தார். 1986இல் அகில இலங்கை முஸ்லிம் லீக் விருது வழங்கிக்

கௌரவித்தது. 1987இல் இந்து சமய, கலாசார அமைச்சு 'இலக்கிய மாமணி' விருதினையும், 1991இல் முஸ்லிம் சமய, பண்பாட்டலுவல்கள் ராஜாங்க அமைச்சு 'நூருல் பன்னான்' பட்டத்தினையும் வழங்கிக் கௌரவித்தன.

இம்மகாநாட்டில் நூல் வெளியிட்ட இன்னொருவர் **அல் ஹாஜ் எஸ்.எம்.கமால்தீன்** அவர்களாவார். இலக்கியம், பத்திரிகைத் துறை, ஒளி, ஒலி பரப்புத்துறை ஆகியவற்றில் மிகவும் ஈடுபாடு கொண்ட கமால்தீன், நூலகவியற்றுறையில் ஆழ்ந்த அறிவும் அனுபவமும் உடையவராவார். ரீ.பி.ஜாயா காலத்து கொழும்பு ஸாஹிராக் கல்லூரியில் முதுதமிழ்ப் புலவர் பண்டிதர் எம்.நல்லதம்பி அவர்களிடம் தமிழ் கற்று இலங்கைப் பல்கலைக் கழகத்தில் சுவாமி விபுலானந்தர், பேராசிரியர் கே.கணபதிப்பிள்ளை, பேராசிரியர் எஸ்.செல்வநாயகம், பேராசிரியர் சு.வித்தியானந்தன் ஆகியோர்களிடமும் தமிழ் கற்ற பின்னர் எ.எம்.எ. அஸீஸ் காலத்து கொழும்பு ஸாஹிராக் கல்லூரியில் கல்விப் பணியும் இலக்கியப் பணியும் புரிந்துள்ளார். நூலகத் துறையில் கனடா, அவுஸ்திரேலியா, ஜெர்மனி ஆகிய நாடுகளில் பயிற்சிபெற்று இன்று அத்துறையில் ஆகக்கூடிய புலமை பொருந்திய முஸ்லிம் இவரேயாவார்.

இவ்வறிவு, அனுபவம் ஆகியவற்றின் பயனாகக் கொழும்பு பொது நூலகப் பிரதமப் பிரதி நூலகராகவும்; இந்நாட்டில் தேசிய நூலக சேவைகள் சபை அமைக்கப்பட்ட பொழுது அதன் உதவிப் பணிப்பாளராகவும்; இலங்கை நூலகச் சங்கத்தின் தலைவராகவும் பணியாற்றியுள்ளார்.

எஸ்.எம்.கமால்தீன் வகித்த பதவிகளும் அவரது இலக்கியப் பணிக்கு மிகவும் உறுதுணையாயிருந்தன. இலங்கைப் பல்கலைக் கழக முஸ்லிம் மஜ்லிஸின் தலைவர்; அதே பல்கலைக் கழகத்தின் தமிழ்ச் சங்கத் தலைவர்; அகில இலங்கை வை.எம்.எம்.ஏ. மகாநாட்டின் தலைவர்;

கொழும்பு தமிழ்ச் சங்க உபதலைவர்; அகில உலகத் தமிழ் ஆராய்ச்சி சங்க இலங்கைக் கிளையின் ஸ்தாபக அங்கத்தவர்; இலங்கை வானொலி முஸ்லிம் சேவை ஆலோசனைச் சபையின் அங்கத்தவர்; இலங்கைக் கலைக் கழகத்தின் இஸ்லாமிய கலைப்பிரிவுத் தலைவர்; கலாசார அமைச்சின் ஆலோசனைச் சபை அங்கத்தவர்; சாஹித்திய மண்டல தமிழ் இலக்கியக் குழுவின் அங்கத்தவர் போன்ற பதவிகளில் இருக்கும் வாய்ப்புக் கிடைத்த காரணத்தினால் அவரது இலக்கியப் பங்களிப்புக்களும் மேலும் வலுப்பெற்றன.

தாய்லாந்தின் தலைநகரிலே, பர்பரீன், கலாநிதி எ.எம்.எ. அஸீஸ், நூலும் நூலகமும், இஸ்லாமியத் தமிழ் இலக்கியம் தேர்ந்த பட்டியல், பாடசாலை நூலகருக்கான கைந்நூல், I.F.L.A. பொதுநூலக நியமங்கள், இலங்கைத் தமிழ் நூல்களின் தேர்ந்த நூற்பட்டியல் 1947 - 1970 (இணைத் தொகுப்பாசிரியர்: பேராசிரியர் க.கைலாசபதி) என்பன இதுவரை வெளிவந்துள்ள இவரது படைப்புக்களாகும். கலாநிதி ரி.பி.ஜாயா என்னும் ஆங்கில நூலின் ஆசிரியருமாவார். கல்பனா, யங் முஸ்லிம் ஆகிய சஞ்சிகைகளையும் பதிப்பித்துள்ளார். கடல் கட்டி என்னும் இவரது நாவல் தொடராகப் பத்திரிகையில் வெளிவந்துள்ளது. பல நூற்றுக்கணக்கான ஆய்வுக் கட்டுரைகள் பத்திரிகைகளிலும், சஞ்சிகைகளிலும், விசேட மலர்களிலும் வெளிவந்துள்ளன.

அளுத்கம முஸ்லிம் ஆசிரியர் கல்லூரியில் நீண்டகாலம் அதிபராகச் சிறப்பாகப் பணியாற்றிப் பின்னர் கல்விப் பணிப்பாளராயுமிருந்த ஹலீமா கமால்தீன் இவரது துணைவியாராவார்.

இலங்கை நூலகர் சங்கத்தின் நடவடிக்கைகளிற் தீவிர ஈடுபாடு கொண்டுழைக்கும் காரணத்தினால், அச்சங்கம் நடத்தும் பயிற்சி வகுப்புக்கள் மூலம் பல நூலகர்களை உற்பத்தி செய்வதில் உறுதுணையாயிருக்கிறார். அத்துடன் நாட்டின்

பல பாகங்களிலும் புதிய நூலகங்கள் நிறுவப்படும் பொழுது இவரது ஆலோசனைகள் விரும்பிப் பெறப்படுகின்றன.

சர்வதேச மகாநாடுகள் பலவற்றிற் பங்குபற்றிக் கட்டுரைகள் சமர்ப்பிக்கும் வாய்ப்பு இவருக்குக் கிட்டியது. அவற்றுட் சில வருமாறு: *1961:* உலக வாலிபர் மாநாடு, வியட்நாம்; *1967:* அனைத்துலகத் தமிழாராய்ச்சி மூன்றாவது மகாநாடு, பிரான்ஸ்; *1973:* நூலகர் மகாநாடு, அவுஸ்திரேலியா; *1974:* இஸ்லாமியத் தமிழ் இலக்கிய ஆராய்ச்சி இரண்டாவது மகா நாடு, சென்னை; *1980:* சர்வதேச நூலகர் சங்க மகாநாடு, ஜெர்மனி; *1990:* இஸ்லாமியத் தமிழ் இலக்கிய ஆராய்ச்சி மகாநாடு, கீழக்கரை.

கனடா, அமெரிக்கா, இங்கிலாந்து, பிரான்ஸ், ஜெர்மனி, மலேஷியா, சிங்கப்பூர், அவுஸ்திரேலியா, வியட்நாம், சவூதி அரேபியா, துபாய், நைஜீரியா, இந்தியா, பாக்கிஸ்தான், மாலை தீவு ஆகிய நாடுகளில் பரந்த சுற்றுலாக்களையும் மேற்கொண்டுள்ளார்.

இவரது சேவைகளைப் பாராட்டி முஸ்லிம் சமய, பண்பாட்டலுவல்கள் ராஜாங்க அமைச்சு 1992இல் 'கன்சுல் உலூம்' எனும் விருதினை வழங்கிக் கௌரவித்தது.

நூல் வெளியிட்ட மற்றொருவரான **அ.ஸ.அப்துஸ் ஸமது** அவர்கள் அக்கரைப்பற்று பட்டினப் பள்ளிவாசலில் அடங்கப் பெற்றிருக்கும் அஷ்ஷெய்க் அப்துஸ் ஸமது இப்னு ஷெய்கு இஸ்மாயீல் யமானி அவர்களின் கொள்ளுப் பேரனாவார்.

பிரபல ஆலிம் குடும்பத்தில் 1929 செப்டம்பர் 7ஆம் தேதி பிறந்தவர். இவருடைய பெரிய தந்தை ஹாஷீம் ஆலிம் பாவலர்; சிறிய தந்தை அப்துற் றஹீம் ஆலிம்; தந்தைவழிப் பாட்டன் அபூபக்கர் லெவ்வை ஆலிம் ஆகிய அனைவரும் பெருங் கவிஞர்களாவர்.

*1947*ஆம் ஆண்டு தினகரன் பாலர் பகுதியில் தனது முதலாவது ஆக்கத்தை வெளியிட்ட இவர், 1950ஆம் ஆண்டு 'நூர்ஜஹான்' என்ற சிறுகதையை தினகரனில் எழுதினார்.

1955ஆம் ஆண்டு யாழ்ப்பாணம் ஈழகேசரியில் எழுதிய இவரது சீறாப்புராணம் பற்றிய திறனாய்வுக் கட்டுரைகளும் கிராமியக் கவிதை பற்றிய கட்டுரைகளும் இவரை இலக்கிய ஆய்வுத் துறைக்குத் திசை திருப்பின. தொடர்ந்து இந்தியப் பத்திரிகைகளான மணிவிளக்கு, பிறை என்னும் மாசிகைகளில் இஸ்லாமிய இலக்கியத் திறனாய்வுக் கட்டுரைகளை எழுதி வந்தார். இவற்றின் மூலம் நல்ல அறிமுகத்தைப் பெற்ற இவர் சீறா இன்பம், சுலைமான் - பல்கீஸ், இஸ்லாமிய இலக்கிய நோக்கு என்னும் இஸ்லாமியத் திறனாய்வு நூல்கள் மூன்றையும் இந்தியாவிலேயே வெளியிட்டார்.

இலங்கை வானொலியில் இவர் இஸ்லாமிய இலக்கியம் சம்பந்தமாக அனேக கட்டுரைகளை எழுதி வாசித்ததுடன் 25க்கும் மேற்பட்ட நாடகங்களையும் எழுதியுள்ளார். 1982ஆம் ஆண்டு ஒரு வருட காலம் 'இலக்கிய மஞ்சரி' என்னும் சஞ்சிகை நிகழ்ச்சியையும் நடத்தியுள்ளார்.

1977ஆம் ஆண்டு இவரது சிறுகதைத் தொகுதியான 'எனக்கு வயது பதின்மூன்று' சாகித்திய மண்டலப் பரிசிலைப் பெற்றது. இதன் பின் இவர் நாவல்கள் எழுதுவதில் ஆர்வம் செலுத்தினார். தொடர்ந்து பனிமலர், கனவுப் பூக்கள், தர்மங்களாகும் தவறுகள் என்னும் மூன்று நாவல்களை எழுதினார். 1982இல் வீரகேசரி நடத்திய பிரதேச நாவல் போட்டியில் கிழக்கு மாகாணத்தின் சிறந்த நாவலாக 'பனிமலர்' தெரிவு செய்யப்பட்டு அதற்கான பரிசிலைப் பெற்றது. 'கனவுப் பூக்கள்' முஸ்லிம் சமய, கலாசாரத் திணைக்களத்தின் பரிசிலை 1983இல் பெற்றுக் கொடுத்தது.

இவர் செய்த தொகுப்பு நூற்கள் இரண்டு மிகவும் காத்திரமானவை. 1964ஆம் ஆண்டு ஈழத்து முஸ்லிம் புலவர்களின் கவிதைகளைத் தொகுத்து 'முற்றத்து மல்லிகை' என்ற பெயரில் வெளியிட்டார். 1979இல் கொழும்பில் நடந்த இஸ்லாமியத் தமிழ் இலக்கிய மகாநாட்டிற்காக 27 முஸ்லிம் எழுத்தாளர்களின் சிறுகதைகளைத் தொகுத்து 'பிறைப்பூக்கள்' என்ற பெயரில் வெளியிட்டார்.

1959 முதல் முஸ்லிம் மாணவர்களுக்கான பத்துக்கு மேற்பட்ட பாட நூற்களையும் இவர் எழுதி வெளியிட்டார். 'இலக்கியப் பொய்கை' என்ற பாட நூலுக்கு அணிந்துரை வழங்கிய அறிஞர் எ.எம்.எ. அஸீஸ் அவர்கள் ஒரு சமுதாய இயக்கம் செய்ய வேண்டிய இந்நற்பணியை அப்துஸ்ஸமது தனியொருவராக நின்று செய்கிறார். அவருக்கு முஸ்லிம் சமுதாயம் கடப்பாடுடையது எனக் குறிப்பிட்டுள்ளார்.

1955ஆம் ஆண்டு பயிற்றப்பட்ட ஆசிரியராகப் பதவியேற்ற அப்துஸ் ஸமது, 1975ஆம் ஆண்டு களனிப் பல்கலைக் கழகத்தில் தமிழ் சிறப்புப் பட்டதாரியாக வெளியேறினார். 1979இல் இருந்து அட்டாளைச்சேனை ஆசிரியர் கலாசாலையில் தமிழ் விரிவுரையாளராகக் கடமையாற்றி வருகிறார். இஸ்லாமிய நூல் வெளியீட்டுப் பணியகத்தின் ஸ்தாபகச் செயலாளருமாவார்.

1991இல் முஸ்லிம் சமய, பண்பாட்டலுவல்கள் இராஜாங்க அமைச்சு நடாத்திய முதலாவது 'வாழ்வோரை வாழ்த்துவோம்' விழாவில் இவர் தாஜுல் அதீப் (இலக்கிய வேந்தர்) விருது பெற்றார். 1992இல் மலேசியா கவிதை மாலை இயக்கம் இவருக்கு 'இலக்கியத் திலகம்' விருது அளித்துக் கௌரவித்தது. 1995இல் அக்கரைப்பற்று தேசியக் கலைஞர் பேரவை நடாத்திய கலைஞர் கௌரவிப்பு விழாவில் "இலக்கிய மாமணி" விருது வழங்கப்பட்டது.

இம்மகாநாட்டில் நூல் வெளியிட்ட இன்னுமொருவர் **அல்ஹாஜ் முஹம்மது சமீம்** ஆவார். பக்கீர் முஹைதீன் அஹமதுப் புள்ளை, நாச்சியா உம்மா தம்பதிகளின் மகனாக 1932ஆம் ஆண்டு நவம்பர் 15ஆந் திகதி பதுளையில் பிறந்தார். பாட்டனார் பக்கீர் முஹைதீன் காயல்பட்டணத்தில் இருந்து தம் குடும்பத்தினருடன் வந்து பதுளையில் குடியேறியவராவார். தாயார் காத்தான்குடி 5ஆம் குறிச்சியைச் சேர்ந்தவர்.

தனது ஆரம்பக் கல்வியை சரஸ்வதி வித்தியாசாலை, பதுளை முஸ்லிம் மகாவித்தியாலயம், தரும தூதக் கல்லூரி ஆகியவற்றில் கற்றதன் பின்னர் உயர் இடைநிலைக் கல்வியைக் கொழும்பு ஸாஹிராக் கல்லூரியில் பெற்றுப் பேராதனைப் பல்கலைக்கழகஞ் சென்றார். அங்கு 1957ஆம் ஆண்டில் வரலாற்றுத் துறையில் விசேட பட்டத்தையும், பின்னர் 1968ஆம் ஆண்டு கல்வி டிப்ளோமாப் பட்டத்தையும் பெற்றார். அதன் பின்னர் கல்வி நிர்வாகப் பயிற்சியை லண்டனில் பெற்றார்.

பாடசாலையிற் கற்கும் காலத்தில் தமிழிலும் இலக்கியத் துறையிலும் மிகவும் ஈடுபாடு கொண்டார். பதுளை முஸ்லிம் மகா வித்தியாலயத்தில் இவர் கற்றுக் கொண்டிருந்த காலத்திலே கவிஞர் அப்துல் காதர் லெப்பை அதன் அதிபராக வந்தபோது அவரிடம் கல்வி பயின்றார்.

1940களில் இந்திய சுதந்திரப் போராட்டத்தின் தாக்கம் இலங்கையில், முக்கியமாக மலைநாட்டில் ஏற்பட்டது. அதிலும் பதுளை நகரம் முக்கிய தளமாக விளங்கியது. ஜவஹர்லால் நேரு, வீ.வீ.கிரி, கல்கி ரா.கிருஷ்ணமூர்த்தி, யோகி சுத்தானந்த பாரதி என்.எஸ்.கிருஷ்ணன் போன்றவர்கள் பதுளையில் உணர்ச்சிபூர்வமான சொற்பொழிவுகளை நிகழ்த்தினர். இதன் தாக்கமாக பதுளை மாணவர்கள் ஒன்றாகச்

சேர்ந்து "தமிழ் மாணவர் கழகம்" என்று ஒன்றை ஸ்தாபித்துத் தமிழை வளர்த்ததோடு 'தருமதூதன்" எனும் பெயரில் பத்திரிகையும் நடத்தினர். இவற்றில் எல்லாம் சமீமும் தீவிர பங்கு கொண்டார்.

கொழும்பு ஸாஹிராக் கல்லூரியில் எ.எம்.எ. அஸீஸ் அதிபராக இருந்த காலத்தில் அல்லாமா எம்.எம்.உவைஸ், எஸ்.எம்.கமால்தீன் ஆகியோரிடம் தமிழ் கற்கும் பாக்கியம் இவருக்குக் கிடைத்தது. பேராசிரியர் கார்த்திகேசு சிவத்தம்பி, பேராசிரியர் சோ.செல்வநாயகம், சிவில்சேவை அதிகாரி கே.நாராயணசாமி, இலங்கை வங்கியின் முன்னாள் தலைவர் ஜெஹான் காசீம், கொழும்பு ஸாஹிராக் கல்லூரியின் தற்போதைய அதிபர் பேராசிரியர் எம்.ரி.ஏ.புர்க்கான் ஆகியோர் சக மாணவராவர்.

பேராதனைப் பல்கலைக் கழகத்தில் பேராசிரியர் கே.கணபதிப் பிள்ளை, பேராசிரியர் எஸ்.செல்வநாயகம், பேராசிரியர் ஏ.சதாசிவம், பேராசிரியர் சு.வித்தியானந்தன் ஆகியோரிடம் தமிழ் கற்றார்.

இத்தகைய கல்விப் பாரம்பரியத்தையுடைய ஒருவர் தம்து வாழ்வில் ஏனைய தொழில் துறைகளோடு தமிழ் மொழி, இலக்கியம், வரலாறு, ஆய்வு என்பனவற்றில் தம்மைத் தீவிரமாக இணைத்துக் கொண்டது இயல்பானதே. அநேக ஆய்வுக் கட்டுரைகளை இவர் வெளியிட்டுள்ளார். வானொலியில் பல சொற்பொழிவுகளை நிகழ்த்தியுள்ளார். "ஒரு சிறுபான்மை சமூகத்தின் பிரச்சினைகள்" எனும் இவரது கட்டுரைத் தொடர் மிகப் பிரபல்யம் பெற்றதாகும்.

இலங்கையில் மத்ரஸாக் கல்வி, இஸ்லாமியக் கலாச்சாரம், இலங்கை முஸ்லிம்களின் திருமண சம்பிரதாயங்கள் என்பன இவரது நூல்களாகும்.

இவரது இலக்கிய சேவையைக் கௌரவிக்குமுகமாக முஸ்லிம் சமய, பண்பாட்டலுவல்கள் இராஜாங்க அமைச்சு 1994இல் "கன்சுல் உலூம்" எனும் பட்டத்தை வழங்கியது.

பல்கலைக்கழகக் கல்வியின் பின்னர் கொழும்பு ஸாஹிராக் கல்லூரியில் விரிவுரையாளராகக் கல்விப் பணியைத் தொடங்கிய சமீம் முதலாம் தரக் கல்விப் பணிப்பாளராகத் தமது சேவையிலிருந்து 48வது வயதில் ஓய்வுபெற்ற பின்னர் சவூதி அரேபியாவில் ரியாத் சர்வகலாசாலையின் சர்வதேசக் கல்விப் பிரிவில் ஆசிரியராகவும் பின்னர் சமூகக்கல்விப் பிரிவின் தலைவராகவும் கடமையாற்றினார். பின் இலங்கைத் தூதுவராலயத்தினால் ரியாத்தில் நிறுவப்பட்ட சர்வதேசப் பாடசாலையின் அதிபராகவும் அதனைத் தொடர்ந்து சர்வதேச இஸ்லாமிய அகடமியின் பணிப்பாளராகவும் கடமையாற்றினார்.

நூல் வெளியிட்ட அடுத்தவரான **அல்ஹாஜ் எஸ்.எம்.ஏ. ஹஸன்,** 27.5.1927இல் பேராதனை மீவத்துறையில் பிறந்தவர். ஆரம்பக் கல்வியை பேராதனை துவிபாஷா பாடசாலையிலும் ஆங்கிலக் கல்வியை கண்டி காந்தி கல்லூரியிலும் பயின்றவர். 01.06.1945இல் ஆசிரியப் பணியைத் தொடங்கிய இவர், சேவைக் காலத்தில் அளுத்கமை ஆசிரியர் கலாசாலையில் ஆசிரியப் பயிற்சியையும், கொழும்பு அக்குவைனாஸ் கல்லூரியில் ஆங்கில டிப்ளோமா பயிற்சியையும் பெற்றுக் கொண்டார். பின்னர் அதிபராகவும், ஆசிரிய கலாசாலை விரிவுரையாளராகவும், கல்வி அதிகாரியாகவும், பிரதம கல்வி அதிகாரியாகவும் 42 ஆண்டுகள் அரசாங்க சேவையாற்றி 1987ஆம் ஆண்டு ஓய்வு பெற்றார். கடந்த ஒன்பது ஆண்டுகளாக கண்டி ஒராபி பாஷா கலாசார நிலையப் பணிப்பாளராகக் கடமையாற்றி வருகின்றார்.

இவரது கலை, இலக்கிய ஆர்வம் பாடசாலைப் பருவத்திலேயே ஆரம்பமானது. முதுதமிழ்ப் புலவர் மு.நல்லதம்பி,

இசை, நாடக ஆசிரியர் க.இராசரத்தினம் ஆகியோர் முறையே இவரது இலக்கிய, நாடக ஆசிரியராக விளங்கினர். பாடசாலைப் பருவத்தில் பல நாடகங்களில் பல்வேறு பாத்திரங்கள் ஏற்று நடித்துள்ளார். மாவட்ட ரீதியிலும், அகில இலங்கை ரீதியிலும், பல பரிசுகளையும் பெற்றுக் கொண்டார்.

1944ஆம் ஆண்டு முதல் இவர் தினகரன், வீரகேசரி, சுதந்திரன் ஆகிய பத்திரிகைகளில் மொழி, இலக்கிய, சன்மார்க்க, வரலாற்றுக் கட்டுரைகள் பலவற்றை எழுதி வந்துள்ளார். அக்காலத்தில் இஸ்லாமியக் கட்டுரை எழுதுவோர் மிகக் குறைவு. அதனால் இஸ்லாமிய விசேட தினங்கள் பற்றி ஏராளமான கட்டுரைகள் எழுதியுள்ளார். வீரகேசரியில் இஸ்லாமிய சன்மார்க்க வினா-விடையொன்றைத் தொடர்ச்சியாக ஓராண்டு காலம் நடத்தி வந்தார்.

அறுபதுகளில் மலையகத்தின் முதறிஞர் அருள்வாக்கி அப்துல் காதிர் புலவர் பற்றிய ஆய்வொன்றை மேற்கொண்டார். 1964இல் அவர் பிறந்த நூறாவது ஆண்டையொட்டி அவர் பிறந்த தெல்தோட்டையில் ஒரு விழாவை ஒழுங்கு செய்தார். கலாநிதி சு.வித்தியானந்தன் தலைமையில் பேரறிஞர் எ.எம்.எ.அஸீஸ் உட்பட இலங்கையின் பல பாகங்களிலிருந்தும் பல அறிஞர்கள் இதில் கலந்து கொண்டனர். அதனைத் தொடர்ந்து 1972இல் 'அருள்வாக்கி' என்ற முதல் நூலை வெளியிட்டார்.

1975இல் திருச்சியில் நடந்த முதலாவது இஸ்லாமியத் தமிழ் இலக்கிய ஆராய்ச்சி மாநாட்டில் 'ஈழத்து முஸ்லிம் புலவர்களின் பங்களிப்பு' என்ற தலைப்பில் கட்டுரை சமர்ப்பித்தார். திரு. எஸ்.டி.சிவநாயகம் அவர்களின் வேண்டுகோளின் பேரில் மாநாட்டு அனுபவங்களை "நெஞ்சத் தாமரையின் இன்ப நினைவுகள்" என்ற தலைப்பில் தினபதியில் தொடராக எழுதி வந்தார். இது பின்னர் நூலுருவாக்கப்பட்டு 1975ஆம் ஆண்டு வெளியிடப்பட்டது.

முன்னாள் கல்வி அமைச்சர் கலாநிதி பதியுத்தீன் மஹ்மூத் அவர்களின் அருஞ்சேவைகளை மக்கள் மனதில் நிலைக்கச் செய்யும் எண்ணத்தினால் 1974ஆம் ஆண்டு "கலாநிதி பதியுத்தீன்" என்ற தலைப்பில் எழுதிய நூல் அவ்வாண்டுக்கான சாஹித்திய மண்டலப் பரிசைப் பெற்றது.

மெய்கண்டான் வெளியீடான "நட்சத்திர மாமா" என்ற சிறுவர் சஞ்சிகையில் "யசஹாமி" என்ற இவரது சிறுவர் தொடர் நாவல் வெளிவந்தது. இலங்கையில் நடந்த அனைத்துலக இஸ்லாமியத் தமிழ் இலக்கிய ஆராய்ச்சி மாநாட்டில் இந்நூல் வெளியிடப்பட்டது.

இவற்றுடன் கம்பன் கவியமுதம் எனும் நூலையும் வெளியிட்டார். அமெரிக்கக் கறுப்பு இன முஸ்லிம்கள், நான் கண்ட பண்டார நாயக்கா என்பனவும் இவரால் மொழிபெயர்ப்புச் செய்யப்பட்ட நூல்களாகும்.

தமிழ்ப் பாட நூல் பிரசுர சபையில் 15 ஆண்டுகளாக பேராசிரியர் உவைஸ் அவர்களின் ஆலோசனையின் பேரில் அங்கத்துவம் பெற்றதால், இஸ்லாமிய கலாசார அடிப்படையிலான பல பாடங்களை எழுதிச் சேர்ப்பதிலும், பாடநூல்களை ஆய்வு செய்வதிலும் முக்கிய பங்களிப்புச் செய்துள்ளார்.

இலங்கை வானொலியில் 1955ஆம் ஆண்டு முதல் முஸ்லிம் - தமிழ் சேவைகளில் நிகழ்த்திய சமய, கலாசாரச் சொற்பொழிவுகள், தொடர்பேச்சுக்கள், கலந்துரையாடல்கள் என்பனவும் இவரது இலக்கிய ஆற்றலை வளரச் செய்துள்ளன.

1974இல் சாஹித்திய மண்டலப் பரிசு; 1975இல் மலையகத் தமிழ் மன்றத்தினால் கலைமணி எனும் பட்டம், 1991இல் முஸ்லிம் சமய, பண்பாட்டலுவல்கள் இராஜாங்க அமைச்சினால் கன்சுல் உலூம் எனும் விருது, 1995இல் மத்திய

மாகாண் இந்து சமய, கலாசார அமைச்சினால் தமிழ் ஆய்வாளன் எனும் பட்டங்களும் வழங்கிக் கௌரவிக்கப்பட்டுள்ளார்.

நூல் வெளியிட்ட பிறிதொருவர் கண்டி மாவட்டம் கல்ஹின்னையெனும் ஊரில் *1933-8-27*இல் பிறந்த **கவிமணி எம்.ஸி.எம்.ஸுபைர்** ஆவார். இவரது தந்தை அல்ஹாஜ் ஏ.ஓ.எம்.காஸிம் லெப்பை; தாயார் ஸபியா உம்மா.

ஸுபைர், தமது ஆரம்பக் கல்வியை கல்ஹின்னை கமாலியா முஸ்லிம் பாடசாலையில் தொடங்கி அல்மனார் வித்தியாலயத்தில் தமிழ் மொழி மூலம் 1950இல் எஸ்.எஸ்.ஸி பரீட்சையில் சித்தியடைந்தார்.

*1952-53*ஆம் வருடங்களில் அளுத்கம (தர்கா டவுண்) ஆசிரியர் பயிற்சிக் கல்லூரியிற் பயிற்சி பெற்றார். *1954*இல் பண்டாரவளை ஸாஹிறாப் பாடசாலையில் ஆசிரியப் பணியையேற்றார். ஐந்தாம் வகுப்பு வரை இருந்த அந்த முகாமைத்துவப் பரிபாலனப் பாடசாலையில் அதிபராகவிருந்த ஜனாப் எஸ்.வீச்.எம்.யாஸின் அவர்களுடன் இணைந்து புகழ்மிக்க ஒரு மகா வித்தியாலயமாக அது உயரும் வரை உழைத்தார்.

பண்டாரவளையில் நீண்டகாலம் கல்விப் பணியாற்றிய இவர், கொழும்பு ஹுஸைனியா மகா வித்தியாலயம், கண்டி மாவட்டம் மாவத்தப்பொல முஸ்லிம் வித்தியாலயம், அக்குறண மத்திய மகா வித்தியாலயம், கல்ஹின்னை அல்மனார் மகா வித்தியாலயம், பள்ளியக்கொட்டுவ முஸ்லிம் வித்தியாலயம் ஆகியவற்றில் கல்விப் பணியைச் சிறப்பாக ஆற்றி, *1991.01.01*இல் ஓய்வு பெற்றார்.

பள்ளியில் படிக்கும் காலம் முதலே எழுத்துத்துறையில் ஈடுபட்டு வந்துள்ளார். இவரது நூலுருப் பெற்ற ஆக்கங்கள் வருமாறு: மலர்ந்த வாழ்வு (*1956*), மலரும் மணம் (*1967*),

கண்ணான மச்சி (1968), பிறைத்தேன் (1979), காலத்தின் குரல்கள் (1981), எங்கள் தாய்நாடு (1984), இலக்கிய மலர்கள் (1989), பாடநூல் சீறாப்புராணம் - பதுறுப் படலம் உரை என்பன.

இவரது கட்டுரை, கவிதைகள் பல பருவ ஏடுகளிலும் வெளிவருகின்றன. இந்தியச் சஞ்சிகைகளான மணிவிளக்கு, பிறை, முஸ்லிம் முரசு முதலான சஞ்சிகைகளிலும், இலங்கையின் பல்வகை ஏடுகளிலும், இதழ்களிலும் இவரது கட்டுரை, கவிதைகள் வெளிவந்து கொண்டிருக்கின்றன.

1954ஆம் வருடம் முதல் இலங்கை வானொலியில் இவருடைய இலக்கியப் பேச்சுக்கள், கவிதைகள், விவரணச் சித்திரங்கள், இசைச் சித்திரங்கள், கவிதா நாடகங்கள் ஒலிபரப்பப்பட்டு வருகின்றன. கல்வி ஒலிபரப்பிலும் இவரது சிறுவர் பாடல்கள் ஒலிபரப்பப்பட்டன. 'மருத மலர்', 'குறிஞ்சித் தேன் மலர்', 'இலக்கிய மஞ்சரி' ஆகிய வாராந்த நிகழ்ச்சிகளையும் தயாரித்துத் தொடர்ந்து நடத்தி வந்தார்.

பாடநூல் வெளியீட்டுத் திணைக்களத்திலும் இவர் பணி புரிந்தார். 1986 முதல் ஜீ.சீ.ஈ. சா/த வகுப்பில் உபயோகிக்கப் பட்டுவரும் தமிழ் இலக்கியம் - தொகுப்பு நூலிலும் இவர் சிறப்பாகப் பங்களிப்புச் செய்துள்ளார். பாடத் திட்ட அபிவிருத்திச் சபையிலும் பணியாற்றினார்.

கண்டியில் இயங்கிய இஸ்லாமிய எழுத்தாளர் இயக்கத்தின் ஆரம்பகாலத் தலைவராக இருந்து பல நூல்கள் வெளிவருவதற்கும், அறிஞர் பெருமக்களைக் கௌரவிப்பதற்கும், இலங்கை முஸ்லிம்களின் மறுமலர்ச்சித் தந்தை அறிஞர் சித்திலெப்பை நினைவு விழாக் கொண்டாடுவதற்கும், அவரது நினைவு முத்திரை வெளியிடுவதற்கும் பெரும் பணி புரிந்தார்.

1960-64 வரை 'மணிக்குரல்' என்ற மாதாந்தச் சஞ்சிகையை நடாத்தி நல்ல பல எழுத்தாளர்களை உருவாக்கினார்.

'மணி மஞ்சரி' என்ற காலாண்டுச் சஞ்சிகை ஆசிரியர் குழுவிலும் இருந்தார். கலாசாலைச் சஞ்சிகைகளையும் சிறப்பாக வெளியிட உதவினார்.

மணிக்குரல் பதிப்பகம் என்ற வெளியீட்டு நிறுவனத்தை நிறுவி நல்ல பல நூல்களை வெளியிட்டார். குறிப்பாகக் கவிஞர் திலகம் அப்துல் காதர் லெப்பை அவர்களின் இக்பால் இதயம், ருபாய்யாத், இறசூல் சதகம், செய்னம்பு நாச்சியார் மான்மியம், ஜாவித் நாமா போன்ற பல நூல்களையும் அச்சுருவில் வெளியிட்டுதவிய இவரது பணி பாராட்டுக்குரியதாகும்.

*1981*ஆம் வருடம் அகில இலங்கை ரீதியில் இவரது பணிகளைப் பாராட்டிக் கொழும்பு ஸாஹிராக் கல்லூரி கபூர் மண்டபத்தில் நடைபெற்ற விழாவில் 'ஈழத்துக் கவிமணி' என்ற பட்டம் வழங்கிப் பாராட்டி பொற்கிழியும் வழங்கப்பட்டது.

*1991*ஆம் வருடம் முஸ்லிம் சமய, பண்பாட்டலுவல்கள் ராஜாங்க அமைச்சினால் நடாத்தப்பட்ட கலைஞர்களைக் கௌரவிக்கும் விழாவிலே இவர் 'நஜ்முஹ் ஷுஅறா' என்ற பட்டமும், பொற்கிழியும், விருதும், சான்றிதழும் வழங்கிக் கௌரவிக்கப்பட்டார்.

*1993*ஆம் வருடம் தமிழ்நாடு, அய்யம்பேட்டை திருக்குர்ஆன் மாநாடு சார்பில் அதன் ஸ்தாபகர் அல்ஹாஜ் பீ.ஏ. அப்துல் ரஹீம் ஸாஹிப் அவர்களால் கொழும்பு 'றினய் சான்ஸ்' ஹோட்டலில் நடந்த பாராட்டு விழாவில் பொற்கிழியும், கேடயமும் வழங்கிக் கௌரவிக்கப்பட்டார்.

*1994*ஆம் வருடம் மலேஷியா கோலாலம்பூரில் கலாநிதி பட்டர்வொர்த் எஸ்.எம்.ஸைனுதீன் தலைமையில் இயங்கும் ''கவிமாலை'' என்ற இலக்கிய அமைப்பு கவிமணி ஸுபைருக்கு 'இலக்கியமணி' என்ற பட்டம் வழங்கிக் கௌரவித்தது.

இஸ்லாமியத் தமிழ் இலக்கிய ஆராய்ச்சி மகாநாட்டை யொட்டிப் பழம்பெரும் நூல்களுக்கு உரை எழுதியவர்களுள் மருதமுனையைச் சேர்ந்த **ஜே.எம்.எம்.அப்துல் காதிர்** அவர்களுள் ஒருவர் ஆவார். 'ஜே.எம்.' என எல்லோராலும் அன்புடன் அழைக்கப்பட்ட இவர் 23.11.1919இல் மருதமுனையில் பிறந்தார். தமது 18வது வயதில் ஆசிரியராகி ஒரு வருடத்திலேயே தலைமையாசிரியராகவும் ஆகி 40 வருடங்கள் கல்விப் பணியாற்றினார். யாழ்ப்பாணத்திலுள்ள கோப்பாய் ஆசிரியர் பயற்சிக் கலாசாலையில் 1940-41 இல் ஆசிரியப் பயிற்சி பெற்றர். மதுரை தமிழ்ச் சங்கத்தின்ரால் நடாத்தப்பெற்று வந்த பால பண்டிதர் பரீட்சையிலும் சித்தியடைந்தார். 1952 அளவில் தமது சொந்த முயற்சியில் ஆங்கில மொழி மூலம் எஸ்.எஸ்.சி. பரீட்சையில் சிறப்பாகத் தேர்ச்சியடைந்தார். நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் தலைமையாசிரியராகவும், இரண்டாந்தர அதிபராகவும் சேவை புரிந்த ஜே.எம்.எம்.அப்துல் காதிர், 1972இல் முதலாந்தர (விசேட) அதிபர் பதவி பெற்றார். அக்காலத்தில் அப்பதவி வகித்த பட்டதாரி அல்லாத பயிற்றப்பட்ட தமிழ், முஸ்லிம் ஆசிரியர்கள் மிகச் சிலரேயாவர்.

1978இல் ஓய்வுபெற முன்னரே பிரசித்த நொத்தாரிஸ் பரீட்சையில் இலங்கையிலேயே அதிக புள்ளிகள் பெற்றுச் சித்தியடைந்தார். 1979இல் நொத்தாரிஸ் நியமனம் வழங்கப் பெற்று அப்பணியினைச் செய்து வந்தார். 20.07.1980இல் ஆங்கில மொழிமூல நொத்தாரிஸாகவும் விசுவாசப் பிரமாணம் செய்தார். ஆயினும் 01.08.1980இல் தமது 61வது வயதில் காலமானார்.

ஜே.எம்.எம்.அப்துல் காதிர் பண்டைத் தமிழ் இலக்கிய நூல்களில் ஆழ்ந்த அறிவும் ஈடுபாடும் உள்ளவராகவும் இருந்தார். அவற்றின் தமிழ்ச் சுவையையும் இலக்கிய உயர்

வையும் வெளிக்கொணர்வதிலும் அவை பற்றிய ஆய்வுகள் மேற்கொள்வதிலும் அயராது ஈடுபட்டார். இதனால் அவ்வி லக்கியங்களைப் பற்றிய கட்டுரைகளை இலங்கை, இந்தியப் பத்திரிகைகளில் வெளியிட்டதோடு இலங்கை வானொலியி லும் அநேக உரைகளை நிகழ்த்தினார். குறிப்பாகத் தென்னிந் தியப் பத்திரிகைகளான பிறை, மனிவிளக்கு, முஸ்லிம் முரசு ஆகியவற்றில் சீறாப்புராணம், புதுக்குஷ்ஷாம், முஹிதீன் புராணம், அருள்வாக்கி அப்துல் காதர் கவிதைகள், காதிறு முஹியதீன் மரைக்காயரின் கவிதை நூலான இஸ்லாமிய வழக்கு மன்றம் உட்படப் பல இலக்கியங்கள் பற்றிய ஆய்வுக் கட்டுரைகள் தொடராக வந்தன.

புதுக்குஷ்ஷாமுக்கு அவர் எழுதிய உரை க.பொ.த.சாதா ரண தரப் பரீட்சைக்குரிய தமிழ் இலக்கிய நூலாக 1970களில் இலங்கைப் பாடசாலைகளில் உபயோகிக்கப்பட்டது. அதே போன்று முஹியதீன் புராணம் - ஹஜ்ஜுக்குப் போன படலத்துக்கு அவர் எழுதிய உரை எச்.என்.சி.ஈ. வகுப்புக்க ளில் பாடநூலாக உபயோகிக்கப்பட்டது.

இஸ்லாமியத் தமிழ் இலக்கியங்கள் இயற்றப்பட்ட காலங்களையும் அவற்றை யாத்த பாவலர்கள் வாழ்ந்த காலங் களையும் துல்லியமாகக் கணிப்பது அவசியமென அவர் கருதினார். இதன் பொருட்டு ஹிஜ்ரித் திகதிகளை கிறிஸ்து யுகத் திகதிகளாகவும், கிறிஸ்து வருடங்களின் திகதிகளை ஹிஜ்ரி வருட நாட்களாகவும் இல்குவில் கணிக்க உதவும் சூத்திரம் ஒன்றை நீண்ட ஆராய்வின் பின் தயாரித்திருந்தார். அதனைப் பதிப்பில் வெளிக்கொணர முன்னர் அவர் இறந் தது துரதிருஷ்டமே.

1970 - 79 காலப் பகுதியில் வெளிவந்த சிங்கள மொழியிலான நூல்கள் வருமாறு:

722. ஏ.எம்.ஷாகுல் ஹமீத்
லமா குர்ஆன்
பாணந்துறை
1971
50, ரூ.1.75

723. ஏ.எம்.ஷாகுல் ஹமீத்
லமா ஹதீஸ்
பாணந்துறை
1971
48, ரூ.2/-

724. எம்.எம்.உவைஸ்
நபிநாயக சரிதய
1971
305, ரூ.3.75

725. ஏ.எம்.ஷாகுல் ஹமீத்
தஃலீமுஸ் ஸலாத்
பாணந்துறை/ அல்-கஸ்ஸாலி பிரசுராலயம்
1974
95, ரூ.32.50

726. ஏ.எம்.ஷாகுல் ஹமீத்
அல்ஹதீஸ் - 1400
பாணந்துறை
1974
240, ரூ.40/-

727. ஏ.எம்.ஷாகுல் ஹமீத்
இஸ்லாமிய கெடியன்
பாணந்துறை
1978
18, இலவசம்

ஆய்வுக்குட்பட்ட தசாப்தத்துள் அறபு மொழியிலான நூல் ஒன்றே ஒன்று தான் வெளிவந்துள்ளது. அது வருமாறு:

728. எம்.சி.புர்ஹானுத்தீன்
பாபுல் குர்ஆன்
நாவலப்பிட்டி
1975
35, ரூ.1/-

எனினும் ஆங்கில மொழி மூலம் கணிசமான தொகை நூல்கள் வெளிவந்துள்ளன. அவையாவன:

729. பதியுத்தீன் மஹ்மூத்
The Muslim Case in the Constituent Assembly
கொழும்பு
1970
17

730. முஹம்மது ஸமீர்
The Life of M.C.Abdul Cader and the Fez Question
கொழும்பு/ சோனக இஸ்லாமிய கலாசார நிலையம்
1970 டிசம்பர் 31
9

731. ஷெய்க் முஹம்மத் முஹியத்தீன் குருபாவா
Wisdom of the Divine - Al Hikmathul Jannath
கொழும்பு/ செரண்டிப் சூபி ஸ்டடி சேர்க்கிள்
1971 பிப்ரவரி
102

732. மொஹிதீன் ஏ.காதர்
Islam
கொழும்பு
1971
174

733. ஏ.சீ.ஏ.வதூத்
The Holy Prophet Foretold by Jesus Christ in the Gospel of St.Barnabas
கொழும்பு/ இலங்கை முஸ்லிம் மிஷனரி சங்கம்
*1973*
32

734. The Legacy of the Holy Prophet of Islam
கொழும்பு/ சுன்னி ரஸ்வி சங்கம்
*1974*
62

735. ஏ.எம்.ஷாகுல் ஹமீத்
Essential of Islam
பாணந்துறை
*1975*
40, ரூ.20/-

736. எம்.எம்.உவைஸ்
Muslim Epics in Tamil Literature
பாணந்துறை
*1976 மே 19*

737. ஏ.ஐ.எல்.மரிக்கார் + ஏ.எச்.மாக்கான் மாக்கார் + ஏ.எல்.எம். லாபீர்
The Moors Association - It's Impact of the Community
கொழும்பு/ அகில இலங்கை சோனகர் சங்கம்
*1976 ஜூன் 29*
400

738. ஏ.ஐ.எல்.மரிக்கார் + ஏ.எல்.எம்.லாபீர் + ஏ.எச்.மாக்கான் மாக்கார்
Glimpses from the past of the Moors of Sri Lanka
கொழும்பு/ சோனக இஸ்லாமிய கலாசார நிலையம்
*1976 ஜூலை*
224

739. டரேல் பீரிஸ்
Badiudeen - Pioneer of a New Age
திக்குவல்லை/ எம்.எம்.ஹிதாயத்துல்லா
*1977 பிப்ரவரி 6*
1ஆம் பதிப்பு: 1939 ஜுலை 1

740. ஏ.சீ.ஏ.வதூத்
The Holy Prophet and his Universal Mission
கொழும்பு/ இலங்கை முஸ்லிம் மிஷனரி சங்கம்
1977 மார்ச் 3
32

741. ஷெய்க் முஹம்மத் முஹியத்தீன் குருபாவா
Wisdom of the Divine-
Al-Hik-mathul Jannath Vol 11
கொழும்பு/ செரன்டிப் சூபி ஸ்டடி சேர்க்கிள்
1977
132

742. ஏ.எச்.மாக்கன் மாக்கார்
Short Biographical Sketches of Macan Markar and Related Families
கொழும்பு
1977
410

743. ஏ.ஆர்.ஏ.நூர் அமீன்
A.M.A.Azeez
கொழும்பு/ அகில இலங்கை வை.எம்.எம்.ஏ. பேரவை
1978 நவம்பர்
19

744. எம்.எம்.தௌபீக்
Sir Razik Reveals
1978 டிசம்பர் 29
40

745. ஏ.எம்.ஷாகுல் ஹமீத்
Islam at a glance
பாணந்துறை
*1978*
*14,* ரூ.*1.50*

746. எம்.எம்.இஸ்மாயீல்
Open Letter to Dr.Gunapala Dharmasiri
சம்மாந்துறை
*1978*
*10*

747. எஸ்.எம்.அஹ்மத்
The Light of the Truth
கல்முனை/ இஸ்லாமிய இலக்கிய வெளியீடுகள்
*1979* பிப்ரவரி
*84*

748. ஸம் ஸம் அக்பர்
Pioneer of the Muslim Revival - A.M.Wapuchi Marikkar
கொழும்பு/ சோனக இஸ்லாமிய கலாசார நிலையம்
*1979* மே
*19*

749. எம்.எச்.எம்.அப்துல் காதர்
Some Quran Injunctions about man, his life & his Relationship to his environment
கொழும்பு/ வை.எம்.எம்.ஏ.தேசியக் கவுன்சில்
*1979*
*15*

750. எம்.எம்.தௌபீக்
Dahlan the Undaunted
கொழும்பு
*1979*
*17*

751. எம்.ஏ.எம்.சுக்ரி
Islam and Education
பேருவளை/ நளீமிய்யா இஸ்லாமிய வெளியீட்டுப் பணியகம்
1979
20

752. ஏ.எச்.மூமீன்
Towards Islam
கொழும்பு
1979
160

இத்தசாப்தத்துள் வெளிவந்த மொழிபெயர்ப்பு நூல்கள் வருமாறு:-

753. எம்.எம்.உவைஸ்
இஸ்லாம் யனு குமக்த (சிங்களம்)
ஆங்கில மூலம்:- வட் இஸ் இஸ்லாம்
கொழும்பு/ ஜமாஅதே இஸ்லாமி
1970
192

754. ஏ.எம்.எச்.எச்.அஷ்ரப் மரைக்கார்
சத்தியப் பிரசாரத்தில் இஸ்லாமியப் பெண்
உருதுமூலம்: அமீன் அஹ்ஸன் இஸ்லாஹி மௌலானா
கொழும்பு
1970
22, 50 சதம்

755. மௌலவி எம்.எச்.எம்.புஹாரி
புனித ரமழான் புகழ் பாடல்கள்
மூலம்:- அஷ்ஷெய்க் அப்துல் காதிர் ஆலிம் ஸாஹிப்
காத்தான்குடி/ மத்ரஸதுல் பலாஹ்
1970
20

756. முஹம்மதுக் காஸீம் இப்னு அஹ்மது லெப்பை
அல்-ஹஜ், அல்-உம்றா, அஸ் ஸியாரம்
அரபு மூலம்: அப்துல் அஸீஸ் இப்னு அப்துல்லா இப்னு பாஸ்
பொத்துவில்
1973 செப்டம்பர் 1
136

757. மௌலவி எம்.ஆதம்பாவா
ஏகத்துவத்தின் இரகசியங்கள்
அறபு மூலம்: அஹ்மத் இப்னு ஹாஜா ஆலபூத்தாமீ ஆல இப்னு அலி
கல்முனை/ ஜம்இய்யத்து அன்சார் சுன்னத்தில் முஹம்மதியா
1973 ஒக்டோபர்
64, ரூ.2/-

758. எம்.எம்.உவைஸ்
கதாமுது - முதற்பாகம்
ஆங்கில மூலம்: அனெக்டோட்ஸ் ஒப் இஸ்லாம்
கொழும்பு/ சோனக இஸ்லாமிய கலாசார நிலையம்
1973
184

759. ஏன் தொழ வேண்டும்
மூலம்: ஹஸனுல் பன்னா + மௌலானா மௌதூதி
கொழும்பு/ இலங்கை ஜமாஅதே இஸ்லாமி
1973
64, ரூ.1/-

760. கருத்தடை - இஸ்லாத்தின் தீர்ப்பு
மூலம்: மௌலானா ஸெய்யித் அபுல் அஃலா மௌதூதி
கொழும்பு/ இலங்கை ஜமாஅதே இஸ்லாமி
1973
